இறையழைப்பின் சிறப்பிதழ்

காவலன் வருடசந்தா
இலங்கை, வெளிநாடுகள்
ரூபா 9-00
(தபாற்செலவு உட்பட)

# காவலன்

கத்தோலிக்க வார வெளியீடு
செய்தித்தாளாகப் பதிவுபெற்றது.

மனிதன் சுவர்கள் எழுப்பாது பாலங்கள் அமைத்தால் வாழ்வு வளம்பெறும்.

94-ம் புத். | 1969-ம் ஆண்டு சித்திரை மாதம் 19-ந் திகதி சனிக்கிழமை — பிரதி சதம் 15 | 14-ம் இல.

# தேவ அழைத்தலுக்காக ஆயரின் குரல்

**கிறீஸ்துவில் அன்பார்ந்த பிள்ளைகளே!**

பாஸ்காவைத் தொடர்ந்துவரும் இரண்டாம் ஞாயிறு — நல்லாயன் ஞாயிறு — உலகம் முழுவதும் தேவ அழைத்தலின் தினமாக அநுசரிக்கப்படுகின்றது. எங்கள் மேற்றிராசனத்திலும் இந்நாளை ஒரு பேரருட் தினமாக அனுசரிக்கப்பட வேண்டுமென்பது எமது விருப்பம்.

### நமது கரிசனைக்கடன்

அன்றொருநாள் யேசுநாதர் அப்போஸ்தலர்களுக்கு "அறுவடையோ மிகுதியாயிருக்கின்றது, வேலையாட்களோ போதாது," என்று கூறினர். இவ்வாக்கியம் இன்றும் எமது மேற்றிராசனத்தின் சேவையாளர் நிலையைக் குறிக்கின்றது. பங்குகளும் ஆங்காங்கே செய்யப்படவேண்டிய ஆத்தும பணிகளும் அதிகரித்துக்கொண்டு போகின்றன. ஆகவே எம்மத்தியில் அரும்பெரும் தொண்டாற்றும் அப்போஸ்தொலிக்க சேவையாளரின் தொகை பெருகவேண்டும். இறைவன் எம்மிடம் ஒப்படைத்த வேலையை திருப்திகரகரமாகச் செய்யவேண்டுமாயின் நாமெல்லோரும் ஆயர்கள், குருக்கள், சந்நியாசிகள், கன்னியர்கள், பொதுநிலையினர், எல்லாக் கிறிஸ்தவர்களும் கிறிஸ்துவின் தோட்டத்திற்கு பணியாளரைத் தேடிக்கொடுப்பதில் ஊக்கமும் கரிசனையும் காட்டி எல்லா வழிவகைகளிலும் ஒத்துழைக்க வேண்டுமென்பதை வத்திக்கான் சங்க ஏடுகள் நமக்கு நினைவூட்டுகின்றன. (சங்க ஏடுகள் 558-ம் பக்.)

### ஆவியின் பல்வேறு கொடைகள்

தேவ அழைத்தல் என்பது ஓர் அருள். ஆகையால் அது ஒரு கொடை. எங்கள் சமுதாயத்தில் தெய்வீகத்தைச் சார்ந்த உண்மைகளுக்குச் சாட்சியமளிப்பதற்கும், உழைப்பதற்கும் பலவித சேவையாளர் தேவைப்படுகின்றனர். இத்தேவைகளை நிவிர்த்தி செய்வதற்கே பரிசுத்த ஆவியானவர் அழைத்தலென்னும் கொடையை வெவ்வேறு விதத்தில் அளிக்கின்ருர்.

சிலரை "விண்ணக வீட்டின்மேல் எழும் விருப்பத்திற்கு தெளிவான சான்று பகரவும், அவ்விருப்பத்தை மனிதக் குடும்பத்தில் தழைத்தோங்கச் செய்யவும்" அழைக்கின்ருர். (சங்க ஏடு 254-ம் பக்.) இவர்கள்தான் தரித்திரம் கற்பு அமைச்சல் எனும் நற்செய்திப் புத்திமதிகளைத் தங்கள் வாழ்க்கை வழியாகக் கையேற்கும் குருக்கள், சந்நியாச, கன்னியாஸ்திரிகளாம்.

இன்னும் சிலரை "மனிதரின் இவ்வுலக பணிக்குத் தங்களையே கையளித்து, இப்பணிமூலம் விண்ணரசிற்கானவற்றைத் தயார்செய்ய" அழைக்கின்ருர். (சங். ஏடு. 254). இவர்கள்தான் இல்லறத்தொண்டர், மறைபோதகர் ஆகியோர்.

இவ்விரு பகுதியினருக்கும் பின் மறைவிலிருந்து மௌனத்துடனும் தற்பரித்தியாகங்களுடனும் எமது மேற்றிராசனத்திற்காக ஓயாது செபித்துவரும் தோலகட்டி சகோதர சகோதரிகளை நாம் மறக்கலாகாது. அவர்களின் ஆச்சிரமம் நமது மேற்றிராசனத்தின் "சக்தி இல்லமாக" இயங்கிவருகின்ற தென்பதின் காரணமாக அதன் இன்றியமையாத் தன்மையை உணர்வோமாக.

### செபம் இன்றியமையாத பொதுக்கடன்

அழைத்தல் என்னும் கொடையை எமது சமுதாயம் நிறைவாகப் பெறுவதற்கு நமது சமுதாயம் முழுவதும் பிரார்த்திக்கவேண்டும். தேவ அழைத்தலுக்கு செபத்தின் முக்கியத்துவத்தை மிகைப்படுத்திக் கூறமுடியாது. இந்தநாளிலே உங்கள் பங்கிலே நடாத்தப்படும் விசேட செப ஆராதனைகளில் நீங்கள் யாவரும் பங்குபற்ற வேண்டுமென்று நாம் விரும்பிக் கேட்கிறோம். குடும்பங்களிலும் பக்திக் கூட்டங்களிலும் இந்த உன்னத நோக்கத்திற்கான செபங்கள் சொல்வது மிகவும் வரவேற்கத்தக்கது.

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

## கிறிஸ்து சமயம் மகிழ்ச்சியானது; ஆனல், கடினமற்றதல்ல

"கிறிஸ்துவின் நற்செய்தி உலகிற்கு புதுவாழ்வையும் வழியையும் கொடுக்கும் மகிழ்ச்சிகரமான செய்தி. ஆனல், அது கடினமற்றதல்ல" என்று பரி. தந்தை 6-வது சின்னப்பர் தமது உயிர்த்த ஞாயிறு செய்தியில் கூறினர். சம்பேதுருவின் மாபெரும் சதுக்கத்தில் 250,000 மக்கள் பரி. தந்தையின் உயிர்த்தஞாயிறு பூசையில் பங்கு பற்றினர்கள். பூசைமுடிவில் "ஊர்பி எட் ஓபி" (urbi et orbi) என்றழைக்கப்படும் "நகரத்திற்கும் உலகத்திற்கும் கொடுக்கும்" விசேஷ ஆசீர்வாதத்தை அழித்தார். 15 துக்கு மேற்பட்ட பாஷைகளில் அல்லேலூயா வாழ்த்துக்களை அங்கே திரண்டிருந்த மக்கட்கு வழங்கி, சமாதானத்தின் சின்னங்களாக மாடாப்புறுவின் கூட்டமொன்றை சதுக்கத்தில் விடுதலைசெய்தார்.



## திருச்சபையும் அரசியலும்

**"திருச்சபை எந்த அரசியல் முறைக்கும் கட்டுப்படுத்தப்பட்டதல்ல. ஆனல், மனிதனின் கால, இடம் கடந்த தன்மையின் அறிகுறியும் பாதுகாப்புமாக இருக்கின்றது."**

இவ்வாறு யாழ்ப்பாணடி மொன்பேட் சாலையில் சென்ற 15-4-69-ல் நடந்த நாலாவது **அன்பர் அரங்கில்** திரு. எஸ். எவ். அல்போனசஸ், B. A. கூறினர்.

"அரசியல் அமைப்பும் திருச்சபையும்" என்ற விஷயம் பற்றி நடத்திய மாதாந்த சல்லாபத்தில் யாழ்நகர் ஆண்களும் பெண்களும் உணர்ச்சியுடன் பங்குபற்றினர்கள். வத்திக்கான் சங்க ஏடுகளை ஆதாரமாகக் கொண்டு நடைபெற்றுவரும் இம்மாதாந்த உரையாடல்கள் நவீன திருச்சபையின் கண்ணேட்டத்திலே பொதுமக்களின் கிறிஸ்தவ வாழ்க்கையை உற்று நோக்குகின்றது.

"திருச்சபை மனிதனின் ஞானச்சீவியத்தையே முதல் நோக்காகக் கொண்டிருந்தாலும், எங்கெங்கே அவனின் அடிப்படை உரிமைகள் ஆபத்துக்குள்ளாகின்றதோ ஆங்காங்கே செயல்படக் கடமைப் பட்டிருக்கின்றது. கிறிஸ்தவர்களும் தங்கள் அயலாருடைய உரிமைகளை மதிக்கவும், காப்பாற்றவும், பேணி வளர்க்கவும் முன்வரவேண்டும். மனிதன் தன் உரிமைகளை எவ்விதம் மதித்துக் காப்பாற்ற வேண்டுமென்பதில் கிறிஸ்தவர்கள் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருக்கவேண்டும்" என்றும் தெரிவிக்கப்பட்டது.

## மெய்விவாகத் திருச்சடங்கில் மாற்றங்கள்?

மெய்விவாகத் திருச்சடங்கில் சிலமாற்றங்கள் யோசிக்கப்பட்டுவருகின்றன என வத்திக்கான் வட்டாரங்களிலிருந்து செய்தி கிடைத்திருக்கின்றது. விவாகஒப்பந்தம்செய்துகொள்ளும் தம்பதிகள் இப்பொழுது குருவானவர் கேட்கும்கேள்விக்கு உத்தாரமாக "ஆம்சுவாமி" என்றுமாத்திரம் கூறுவது வழக்கமாகிவிட்டது; அப்படிமாத்திரம் சொல்லிவிடாது "நான்...(பெயர்) உம்மை (பெயர்) எனது கணவனுக (அல்லது மனைவியாக) ஏற்று, இன்பத்திலும் துன்பத்திலும், சாகும்பரியந்தம் பிரமாணிக்கமான கணவனுக(அல்லது மனைவியாக) இருப்பேன் என்று இங்கு கூடியிருக்கும் சகலர்முன் பாகவாக்களிக்கிறேன்" என்று நீடித்த வாக்குறுதியை, இக்காலத்தில் புரொட்டஸ்தாந்து சமயத்தவர் செய்வதுபோல் கத்தோலிக்கரும் செய்ய திருச்சடங்குச் சபையினர் ஆலோசித்துவருகின்றனர். இதுபற்றி விரைவில் முடிவுசெய்யப்படும்என அறிகிறோம்;

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Christianity—Advanced Level (G. C. E.)

# இரட்சணிய சரித்திரம்

## திட்டத்தின் ஆரம்பம்

(முன் தொடர்ச்சி)

வருங்கால நிகழ்ச்சிகளைத் தீர்க்க தரிசிகள் யூதர்களுக்கு அறிவித்திருந்த போதிலும் அவர்கள் அவற்றைஊகித்து விளங்கிக்கொள்ளவுமில்லை; அதனால் நன்மையடையவுமில்லை. இதனால் இவர்கள் மெசியாவைப்பற்றித் தெளிவான விளக்கம் கொண்டிருக்கவில்லை. சிலவேளைகளில் அவர் வெறும் மனிதனுகவே கருதப்பட்டார். இன்னுஞ் சில சந்தர்ப்பங்களில் அவர் கடவுளின் வல்லமையில் மூழ்கியவராகக் கருதப் பட்டார். யூதர்களது வரலாற்றின் ஆரம்பத்தில் அவர்கள் அடிமைத் தனத்திலிருந்து மீட்கப்பட்டனர். இது போன்ற இன்னுமொரு மீட்பு இடம் பெறுமென எதிர்பார்த்தனர். இந்த விடுதலையும் அதனால் உதயமாகும் புதிய யுகமும் முந்திய மீட்பினும் மேம் பட்டதாயிருக்கும். மெசியாவின் மூலம் செயலாற்றி எதுவிதமாயேனுமிலும் அவர்களை மீட்பார். இது சிலுவைமேல் செய்யப்பட்ட உடன் படிக்கையின் உச்சக்கட்டமான உன்னதமான நிறைவேற்றுதலாயிருக்கும். ஒரு மீட்பர் வாக்குத்தான செய்வார், இதுவே இந்த மக்களின் நம்பிக்கையின் மையமாயிருந்தது. ஆனல், மீட்கப்படப்போகின்றவர்கள் யாரென்பது திட்டமாகத் தெரியவில்லை — தெரிந்துகொள்ளப்பட்ட மக்கள் யாவருமே அதற்குப் பாத்திரராகமாட்டார்கள். அவர்களுட் பலர் அவருக்குப் பிரமாணிக்கமில்லாமலிருந்திருப்பார்கள் ஆதல் எஞ்சியவர்கள் மீட்கப்படுவார்கள். ஒருசிறிய வித்திலிருந்து, இறைவனுல் திட்டமிடப்பட்டதும், வரலாற்றின் வளர்ச்சியின் முழுப்போக்கிலும் இறைவனுல் முன்னறிவிக்கப்பட்டதுமான உலகளாவிய புதிய ஜனமான உதயமாகும். இவர்களே மெசியாவின் மக்களாயிருப்பர். தேவனுடன் நிகரற்றவிதமாக ஒன்றித்திருப்பதே இவர்களது பிரத்தியேக சலுகையும் அடையாளமுமாயிருக்கும். எத்தகைய உறவு? அது இறைவனது ஆவியால் உயிர்பெற்றதொரு உறவென்று வர்ணிக்கப்பட்டுள்ளது. இதன் பொருள் தானென்ன?

இறைவனின் ஆவிதான் இப்பிரபஞ்சத்தைச் சிருட்டித்து, மனிதர்களுக்கு வாழ்வளித்து, சலுகைபெற்ற மானிடரை உருவாக்கி—விசேஷமாக இறைவனின் ஆட்சியாளரை நியமித்ததும் தீர்க்கதரிசனவாம், நீதி, ஞானம், பரிசுத்தமென்னுங் கொடைகளை வழங்கியது. ஆகவே, சிருட்டிக்கப்பட்ட யாவற்றுக்கும் வாழ்வையும்—வாழ்வின் உன்னத நிலைகளையுங் கொடுத்தது இந்த ஆவியேயாகும். இந்தஆவியே இறைவனின் நிறைவையும், எழிலையும் மேன்மைப்படுத்தி, உயிரூட்டி, அதை மனிதனுக்குக் கொடுத்தவருகின்றது. இது இறைவனின் வெளிப்படுத்தலாகவும் பிரசன்னமாகவுமிருக்கிறது. ஆனல் விசேஷமாக, இறைவனின் உயிரூட்டும் மனிதனுக்கு வழங்குவதாயிருக்கது. இறைவனின் ஆவி பற்பலவகைகளில் மக்களுக்கு அருளப்படலாம் என்பதை நாம கண்டோம். அது சிருட்டிப்பின் ஆரம்பத்தில் செயலாற்றியதுபோல உயிரைமாத்திரம் கொடுக்கலாம். அன்றேல் ஞானத்தை அல்லது உள்ளுணர்வைக் கொடுக்கவுங் கூடும். பல்வேறுவகைகளிலும், பல் வேறு அளவுகளிலும் இறைவன் மனிதருக்கு மதிப்பையளிக்கிறார். ஆனல் இறைவனின் திட்டம்பூரணமாகும், இறைவன் தமக்குள்ள யாவற்றையும் மனிதனுக்குக் கொடுக்கும் ஒருகாலத்துக்கு வழிநடத்திச் செல்கின்றதென்பதைக் கண்டுள்ளோம். இறைவன் மானிடனை நேசித்தார். ஆகவே, மனிதன் என்ற முறையில் மனிதன் இறைவனது எல்லையற்ற ஐசுவரியத்தைப் பூரண அறிவுடன் பெற்றுக்கொள்ளத் தயாரானதும், இறைவன் அவனைப் பூரணமாக நிறைவாக்க ஆசித்தார். ஆகவே, மெசியாவின் புதிய யுகமானது உதயமானதும், இறைவனின் ஆவியானவர் புதிய மக்களின் தலைவரான மெசியா மீதும், மக்கள் யாவர்மீதும் இறங்குவார்; அவர்களைப் புனிதமாக்குவார்; இறைவனின் சாந்தமுள்ளதும், ஆனந்தமயமானதுமான அழிக்க முடியாத அந்நியோந்நிய நட்புக்குத் தகுதியானவர்களாக்குவார். யூதர்களின் முழு வரலாறும் தனது பூரணத்துவத்துக்காகக் காத்திருந்த தூய ஆவியின் வருகையினல் ஏற்படவிருக்கும் ஆனந்தத்தைச் சிலதடவைகளிற் படம்பிடித்துக் காட்டியது.

"நான் உனக்கு ஒரு புதிய இருதயத்தைக் கொடுப்பேன்; அத்துடன் ஒருபுதிய ஆவியையும் அருளுவேன். உனது கடினமான இருதயத்தை எடுத்து விட்டு அதற்குப்பதிலாகமானிட இருதயமொன்றைக் கொடுப்பேன்; என்னுடைய ஆவியானது உன்னை ஊடுருவிச செல்லும். நீயும் எனது பிரமாணத்தின் பாதையில் நடப்பாய். எனது சட்டங்களை நினைவுகூர்ந்து அவற்றை நிறைவேற்றுவாயாக. இதனுல் உன் பிதாக்களுக்கு நான் வாக்குப்பண்ணிய பூமியைச் சுதந்தரித்துக்கொள்வாய்."

சிலதடவைகளிலே தூயஆவியின் வருகையானது, அத்துடன் தொடர்புடைய தீர்க்கதரிசனத்தோடு இணைத்துக் கூறப்பட்டது.

"நான் உனக்கு என்னை வெளிப் படுத்துவேன்; உன்ஆண்டவராகிய இறைவன் ஒருவனே கடவுள் ...... எனது ஆவியைச் சகல சாதி சனங்கள் மீதும் பொழிவேன்; உனது குமாரர்களும் குமாரத்திகளும் தீர்க்கதரிசனம் கூறுவார்கள். உங்கள் முதியவர்களும் இளைஞர்களும் தரிசனங் காண்பார்கள்; நான் வானமண்டலங்களில் அதிசயத்தையும் பூமியின்மேல் குருதியையும் தீயையும் சுழலும் புகையையும் காட்டுவேன். சூரியன் இருளாகவும், சந்திரன் இரத்தமாகவும் மாற்றப்படும். இவை யாவும் அந்த மகாபயங்கரமான நாள், ஆண்டவரின் நாள் வருமுன்னர் நிறைவேறும்"

புதிய மக்களின் தலைவராகிய மெசியாவைப்பற்றிப் பின்வருமாறு கூறப்பட்டது.

"இறைவனின் ஆவியானது அவர்மேற் தங்கும். அது ஞானத்தினதும் அறிவினதும் ஆவி; அது ஞானத்தினதும் வல்லபத்தினதும ஆவி, அறிவினதும் உண்மை இறை வணக்கத்தினதும் ஆவி, அவர் வெறுந் தோற்றத்தைக் கொண்டு தீர்ப்பிடார். கேள்வியைக் கொண்டும் தீர்மானம் செய்யார். ஏழைகளை நீதியாகத் தீர்ப்பிடுவார். கபடமற்றவர்களுக்கு நன்முறையிற் தீர்ப்பிடுவார்.

இது மக்கள் மத்தியிற் பிரசன்னமாயிருக்கும் தேவனின் வல்லபத்தைப் பற்றிய கிளைழக்கேச மனப்பான்மையைக் காணபிக்கும் ஓர் உயிருள்ள வருணனையாகும்.

# நம்பிக்கை — மகாத்மாகாந்தி

துணையற்றவர்களுக்கு ஒரே துணை கடவுள்தான். மனிதனுக்குக் கடவுளிடமுள்ள நம்பிக்கை சிதறுண்டுபோவதைவிடப் பெரிய தண்டனையோ, துன்பமோ வேறெதுவும் இருக்கமுடியாது.

புனிதமான காரியத்தில் நீங்கள் தோல்வி அடைந்துவிட்டதாக ஒரு போதும் ஒப்புக்கொள்ளாதீர்கள். இனி, நீங்கள்தூய்மையுடையவர்களாக இருப்பதாகவும், இறைவனிடமிருந்து உதவி கிடைக்குமென்றும் நம்புங்கள். நம்பிக்கை வெற்றியின் பாதைக்கு வழி காட்டும்.

இறைவனிடம் நமக்கு நம்பிக்கை இருக்குமானல் எதிர்காலத்தைப்பற்றிச் சிந்தித்து வருந்திக்கொண்டிராமல், இறைவனின் சித்தப்படிதான் எதுவும் நடைபெறும் என்று முற்றிலும் சரணடைந்து விடுவதுதான் மிகச் சிறந்த விவேகமாகும்.



நீங்கள் அண்டை வீட்டுக்காரரை நம்பாவிட்டாலும், அவர்மீது அன்பு காட்டுங்கள். நம் நண்பரை மட்டுமே நம்புவது அர்த்தமற்றது. கள்வர்களும் இவ்வாறு நம்பிக்கை சொள்ளுங்கள். நம்பிக்கை மறைந்த அதே வினாடியில் அவர்கள் பகைவர்களாக மாறி விடுகின்றனர்.

நீங்கள் தூய நம்பிக்கையை வளர்த்துக்கொண்டு உங்களைப் பாதுகாக்கும் கவசமாக இறைவன் பாதங்களைப் பற்றிக்கொள்ளுங்கள். அவரைவிட வன்மைமிக்கவர் ஒருவருமில்லை. இறைவன் பாதங்களில் சரணடைந்துவிடும் ஒருவனை எந்தத் தீயசக்தியும் அழிப்பதில்லை.

இறைவனிடமுள்ள நம்பிக்கையை இழந்துவிடாதீர்கள், ஒரேயொரு தீய எண்ணத்திற்கு, ஒரேயொரு பாவமான எண்ணத்திற்கு நீங்கள் இடமளித்தாலும் இந்த நம்பிக்கை உங்களிடமிருந்து விடைபெறுகின்றது என்பதை மறவாதீர்கள்.

சோதனையில் உங்கள் நம்பிக்கை குன்றிவிடக்கூடாது. வளமான வாழ்விடையே தோன்றும் ஆரவாரமான நம்பிக்கை மதிப்பிழந்துவிடும்.

மிகக் கடுமையான சோதனைக்குப் பின்னும் ஒளிகுன்ருத நம்பிக்கைதான் நமக்குத் தேவை. உலகம் முழுதும் இழந்தாலும் அசைக்கமுடியாத நம்பிக்கைவேண்டும். இல்லாவிட்டால் அது மேற்பூச்சுப் பூசப்பட்ட கல்லறைக்குச் சமமாகிவிடும்.

யேசுபோன்ற மாபெரும் வீரர்கள் தனியாகவே நின்று போராடியிருக்கிருர்கள். தங்களுடன் எப்போதும் இறைவன் இருக்கிருர் என்று நம்பியதால் அவர் தம் தனிமையை உணர்வதில்லை.

நான் கடவுளை நம்புவதால்தான் மனிதர்களையும் நம்புகிறேன். நான் நம்பிக்கை வைப்பதற்குக் கடவுள் இல்லையாயின் மனித வர்க்கத்தையே வெறுப்பவனுக இருப்பேன்.

வெளித்தோற்றத்திற்கு முரணுகத் தோன்றினுலும் தேசியம், சகிப்புத்தன்மை, நட்பு முதலியவை அபிவிருத்தியடைய விசுவாசத்தையும், நம்பிக்கையையும்தவிர வேறுவழியில்லை.

நம்பிக்கைக்கு மதிப்புஇருக்கவேண்டுமானல், அது மனிதரின் உள்ளத்தில் நிரந்தரமாக எழவேண்டும். நம்பிக்கைக்கு எல்லையேயில்லை.

பல கடுமையான அதிர்ச்சிகளுக்கு நான் ஆளானபோதும் அதிர்ச்சியடைந்ததில்லை, நானும் எனது நம்பிக்கையில் பங்கு கொண்டவர்களும் இலாபமே அடைந்திருக்கின்ருேம். பிறர் வஞ்சிப்பதன்மூலம் நாம் அழிவடைவதில்லை. நம் ஆன்மாவை இழந்துவிட்டால்மட்டுமே அழிவெய்துகின்ருேம்.

ஒவ்வொரு பொதுத்தொண்டரும் பின்பற்றவேண்டிய மருத்துவ முறை என்னவெனில், ஒவ்வொரு தொண்டரும் கூறுவதை நம்புவதுதான்.

நம்பிக்கை வைப்போர் ஏமாற்றப்பட்டாலும் வஞ்சிக்கப்பட்டாலும் ஒருபோதும் அழிவெய்துவதில்லை.

நீங்கள் என் கண்களைத் தோண்டினுலும், மூக்கை அறுத்தாலும், நான் இறக்கமாட்டேன். ஆனல், நான் இறைவன்மீது வைத்துள்ள நம்பிக்கையைச் சிதைத்துவிட்டீர்களானல் நான் இறந்தவனுவேன்.

பகுத்தறிவு செயல்பட முடியாத செய்திகளில் இறைவன் இருக்கிருன் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. எத்தனை தர்க்கவாதம் செய்தாலும், அந்த நம்பிக்கையிலிருந்து என்னை அசைக்கமுடியாது.

நியாயமற்ற நம்பிக்கை கண்மூடித்தனமான மூடநம்பிக்கையாகும்.

நம்பிக்கை உள்ளத்தின் தீர்ப்பாகும். பகுத்தறிவின்மூலம் நம்பிக்கையை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

நம்பிக்கையும் பகுத்தறிவும் முரணானவையல்ல. ஒருவனுடைய நம்பிக்கை எவ்வளவு உறுதியுடையதோ, அவ்வளவுக்கு அது பகுத்தறிவைச் சாணைபிடிப்பது போலாகிறது.

கடவுளிடம் நம்பிக்கையின்மையும், அவர் பெருமைகளை அறியாமையுமே கோழைத்தனம்.

நம்மிடம் நமக்கு நம்பிக்கைஇருக்குமானல், நம்மிடம் பக்தியுள்ளம் இருக்குமாயின் இறைவனை ஆசைகாட்டி மோசம் செய்யக் கருதமாட்டோம். அவருடன் வியாபாரப் போட்டியிட மாட்டோம்.

நம்பிக்கையென்பது வேறெதுவுமில்லை. உள்ளத்தினுள் இறைவன் இருக்கிருர் என்ற ஜீவஉணர்ச்சிதான் நம்பிக்கையாகும். புயற்கொந்தளிப்பில் கடலைக் கடப்பதற்கும், மலைகளை அசைப்பதற்கும், கடலைத் தாண்டுவதற்கும் இது துணைபுரிகின்றது.

நம்பிக்கை பணிவின் சின்னம், நாம் அறிவற்றவர்கள். அணுவிலும் கீழானவர்கள் என்பதை ஒப்புக்கொள்வதே நம்பிக்கையாகும்.

ஆன்மீக தத்துவம் பகுத்தறிவுக்கு அப்பாற்பட்டது. அது நம்பிக்கையைப் பொறுத்தது. ஆலயங்களும் நம்பிக்கையைப் பொறுத்ததே.

இறைவனின் ஈடு இணையற்ற வன்மைபொருந்திய சக்தியில்தான் அசைக்கமுடியாத நம்பிக்கை உடையவன். சத்தியத்தில் நம்பிக்கையுடையவன். அதனுல்தான் நான் என்னிடமே நம்பிக்கை வைத்திருக்கிறேன்.

நான் அவமானத்திற்கும், தோல்விக்கும், சூருவளிக்கும் இடையே மன அமைதியோடு வாழ்வதற்குக் காரணம் இறைவனிடம் எனக்குள்ள அழியாத நம்பிக்கையேயாகும்.

சகிப்புத்தன்மையில்தான் நம்பிக்கை வைத்துள்ளேன். பொறுமையின் சின்னமான யேசு கிறிஸ்தவர்களுக்கு மட்டும் சொந்தமானவரல்லர். உண்மையில் எந்தச் சமூகத்திற்கும் உரியவரல்லர். அவர் உபதேசங்கள் உலகம் முழுமைக்கும் சொந்தமானவை.

தொகுத்தவர்: "ரஜனி"
— சர்வவியாபி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செபமாலைத்தாசர் சமுதாயம்

ஓர் அற்ப தேவ சிநேகமுயற்சி திருச்சபைக்கு எவ்வளவு விலையேறப் பெற்றதெனில், அதன் மற்றெல்லா வேலைகளும் அதற்கு நிகராகாது. (St. John of the Cross.)

**விருது வாக்கு :**

"கிறிஸ்துநாதரின் நிமித்தம் பேதைகளானோம்."



**ஆரம்ப உரை :**

"செப தபத்தால் அன்றி இவ்வகைப் பசாசை ஓட்ட முடியாது." பையனிடம் இருந்த அசுத்த அரூபியைத் துரத்தமுடியாத சீடருக்கு யேசுவின் பதில்மொழி இது. இலங்கை இந்தியாவின் நிலையும் இந்த அசுத்த அரூபி பிடித்த பையனின் நிலைக்குத் தான் ஒப்பாயிருக்கின்றது எனக் கருதுகின்றனர் சிலர், நூற்றுக்கணக்கான ஆண்டுகளாய் மறை போதகர்கள் அரும்பாடுபட்டு உழைத்தாலும், இந்நாடுகளில் அக இருள் அகற்றி இறை ஒளி ஏற்ற, ஏன் முடியவில்லை எனப் பலரும் அதிசயிக்கின்றனர். எனவே, இந்நிலையில் செபமாலைத்தாசர் தங்களது செபதபம்நிறைந்த பரித்தியாக வாழ்வால் உதவ முன் வருகின்றனர். தாவீது ஒரு கவணைக்கொண்டு கோலியாத்தை முறியடித்தது போல, செபமாலைத்தாசரும் செபமாலையைக் கொண்டு போர்பொருத முன்வருகின்றனர். (Very Rev. Fr. B. A. Thomas, O. M. I.)

**இவர்களது நோக்கம் :**

உலகத்தை வெறுத்து, துறவறம்பூண்டு, தரித்திரம், கற்பு, அமைச்சல் ஆகிய வாக்குத்தத்தங்களினால் தங்களைப் புனிதப்படுத்தி, கிறிஸ்தவபுண்ணியவாழ்வை மேற்கொள்வதே இவர்களின் பொதுவான நோக்கமாகும். சிறப்பாக உலகம்மனந்திரும்பும்பொருட்டு, அதிலும் தம் தாய் நாடு மனந்திரும்பச் செபத்தாலும், தபத்தாலும் உழைப்பதாம். இச் சிறப்புநோக்கை நிறைவேற்ற இவர்கள், நசரேத்தின் திரு இல்லத்தில் "திருக்குடும்பம் காட்டிய வழியில் தாழ்மையான உழைப்போடு கூடிய தியான வாழ்வை வாழ்கின்றனர். இன்னும் உலகம் மனந்திரும்ப, நற்கருணை முன்னிலையில் திருச் செபமாலையை, இரவும் பகலும் இடைவிடாமல் முறைமாறி ஓதிவருகின்றனர். குருக்களும், குருத்துவ ஆயத்தக்காரரும் 'திருப்புகழ் மாலையைத்' தினமும்பண்ணுடன் பாடிவருகின்றனர்.

**தியான வாழ்வின் தேவை :**

"திருச்சபையில் தியான வாழ்வுத் துறவிகள் இல்லாவிடில், அதன் முழு அமைப்பும் திருப்தியான முறையில் இராது: ஏனெனில், கத்தோலிக்க திருச்சபையின்பரிசுத்ததனமும், கொழுமையும், அழகும் இத்துறவிகள் மூலம்தான் பரிமளித்து, நறுமணம்வீசுகின்றது. ("Catholic Leadr Aug. 24 1939.) இவ்வாழ்வைப் பரிசுத்த தந்தையர்கள் மிகவும் புகழ்ந்து பாராட்டி, வேதபோதகநாடுகளுக்கு இதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தனர். மறை பரப்புப் பணிக்குச் செபமும், தபமும் இன்றி அமையாததெனப் பரிசுத்த தந்தை 13-ம் சிங்கராயர் கூறியுள்ளார். இக்கூற்றுக்கமைய "வேதபோதகநாடுகளில் தியான வாழ்வுத் துறவற நிறுவனங்களை ஏற்படுத்தி, செபதபவாழ்வை ஊக்குவியுங்கள். ஏனெனில், அளவற்றவிதமாக ஆண்டவன் அருளை உங்கள்மேலும், உங்கள் முயற்சிகள்மேலும் இவர்கள் பொழியப்பண்ணுவார்கள்" என்று பரிசுத்த தந்தை 11-ம் பத்திநாதர் மறைஆயர்களுக்குக் கூறியுள்ளார். (Rerum Ecclesiae.)

**வாழ்க்கை :**

இன்றைய உலகிற்கு இவர்களின் வாழ்வு உகந்ததல்ல எனப் பலரும் பலவாறாகக் கூறுகின்றனர். ஆனால், செப தபத்தோடுகூடிய கைத்தொழில்வாழ்வு மனிதஇயல்புக்கு மேற்பட்டதல்ல; மனித வாழ்வுக்குமுரணானதுமல்ல, மாறாக இவ்வாழ்வைப் புகழ்வாரன்றி இகழ்வாரில்லை. தூய இறை அன்பினால், வாழ்வில் ஏற்படும் துன்பங்கள் எல்லாம் தூசியாய் மாறிவிடும். அழிவுறும் மகிமைக்காக — பெருமைக்காக, மனிதன் எவ்வளவோ துன்பத்தையும் அனுபவிக்கத் தயாராகிறான். சந்திர மண்டலத்தைச் சேருவதற்காகத் தன்உயிரையும் தியாகம் செய்ய முன்வருகிறான். ஆனால், இறைவனின் புகழுக்காக – மகிமைக்காக அழிவுறும் அற்ப துன்பங்களை அனுபவிக்கக்கூடாதா?

ஆரம்பகாலத்தில் செபமாலைத் தாசரின் வாழ்வு கடினமாய்இருந்தது உண்மையே. இன்று அவ்வொழுங்குகள் எவ்வவோ தளர்த்தப்பட்டுள்ளன. எல்லோரும் இலகுவில் வாழக்கூடிய முறையில், உணவு, உழைப்பு, ஓய்வுநேரங்கள் ஒழுங்கு படுத்தப் பட்டிருக்கின்றன. இலங்கை, இந்தியாவிலுள்ள மக்கள் ஆண்டவனின் அருளைப் பெறவும், திருச்சபை முழுமை அடையவும், நம் நாட்டுமக்கள் பலர் இத் தியாக வாழ்வுக்குக் கையளிக்க வேண்டும். இன வேறுபாடு இன்றி எல்லோரும்அழைக்கப்படுகின்றனர். பரிசுத்த ஆவியின் குரலுக்குச் செவிசாய்ப்பது நம் கடனாகும்.

விபரமறிய விண்ணப்பிக்கவும்:

அருட்திரு தந்தை அதிபர்,
"செபமாலைத்தாசர் இல்லம்",
தோலகட்டி,
வசாவிளான்.



# திருக்குடும்பக் கன்னியர் சபை

கடந்த இரு நூற்றாண்டுகளாக யாழ்ப்பாண மேற்றிராசனத்தில் தொண்டு புரிந்த; புரிகின்ற திருக்குடும்பக் கன்னியரைக் கத்தோலிக்க சமூகமும் ஏனைய பிற சகோதரர் யாவரும் அறிவர். இவர்களின் ஸ்தாபனம் 1818ஆம் ஆண்டு பிரான்ஸ் தேசத்தில் புரட்சிகரமான சூழ்நிலையில் மிகத் தரித்திர கோலத்தில் ஆரம்பமாயிற்று. இச் சபையை ஏற்படுத்தியவர் பீற்றர் நோளஜ என்ற பிரான்சிய குரவர். தேவனும் அவரது ஆன்ம வாஞ்சையை ஏற்றவராக, அவர் ஏற்படுத்திய சபையை ஆசீர்வதிக்கும் நோக்கமாகவும் 1822ஆம் ஆண்டு மாசி மாதம் 3ஆந் திகதி செப்ருவா ஜெஸிமா ஞாயிறன்று திவ்விய சற்பிரசாத ஆசீர்வாதத்தின்போது தரிசனமானார். 40 வருடங்களின்பின் 1862 ஆம் ஆண்டு இலங்கையில் விசேஷமாக யாழ்ப்பாணத்தில் இச்சபை தனது வேலையை அக்காலமிருந்த ஆண்டகை சமேரியாவின் ஆதரவில் ஆரம்பித்தது. பின் இலங்கையின் தென்மேல் பகுதிகளிலும் பரவி எல்லாமாக ஏறக்குறைய 90பெரிதும் சிறிதுமான சந்நியாச இல்லங்களைக்கொண்டு மிளிர்கின்றது.

கிறிஸ்துநாதரின் இரட்சணிய வேலையில் திருச்சபையின் நோக்கத்திற் கிணங்கத் திருக்குடும்ப கன்னியர் கருமமாற்றி வருகின்றனர். எதிர்கால அப்போஸ்தலிக்க தொண்டிற்கு கன்னியருக்கு எவ்வித பயிற்சி வேண்டுமோ அவை யாவற்றிற்கும் ஏற்ற சூழ் நிலைகளைச் சபை ஏற்படுத்தி உள்ளது. வைதீக, லௌகீக அறிவு சம்பந்தமான கருத்தரங்குகள் பயிற்சிகள் கூட்டங்களுக்கும் வழிவகுத்துள்ளது.

உலகம் இவர்களிடம் எதிர்பார்ப்பதென்ன? சமூகசேவை, கல்வியறிவற்றோர்க்கு வேதக் கல்வி பயிற்றல், மெய்விவாக அந்தஸ்தில் தவறியிருப்போரை ஒழுங்காக்கல், நோயாளரைத் தரிசித்தல், குருமார் சென்று தரிசிக்க வசதியற்ற இடங்களுக்குச் சென்று கூடாரமடித்து, அவ்விடமுள்ளசக்களை ஒன்று சேர்த்து, ஞானோபதேசக் கல்விபயிற்றல், தேவ கீதங்களைப் பாடப் பழக்கல், திருவழிபாடுகளில் பங்குபற்றப் பயிற்சி கொடுத்தல் ஆகியன அவர்கள் இப்போது மேற்கொண்டுவரும் தொண்டுகளாகும். இவை மாத்திரமல்ல, இளம் பெண்களுக்கு வாழ வழிவகுக்கும் பொருட்டு தையல் நிலையம், நெசவு நிலையம், சிறுவர் பராமரிப்பு நிலையம் ஆகியவற்றையும் கொண்டுநடத்துகின்றனர். பகிரங்க வழிபாடு நடைபெறும் பெரிய நிலையங்களில் தாதிகளாகவும் நின்று பணிபுரிகின்றனர்.

திருச்சபையாகிய மறையுடலின் பொதுநிலையினரும் உறுப்பினர் ஆதலின் குருமார், சந்நியாசிகள் புரிந்து வரும் தொண்டுகள் அவர்களுக்கும் உரியனஎன்பதை விளங்கப்பண்ணி அவ்வித அப்போஸ்தலிக்க தொண்டில் அவர்களும் ஈடுபட அவர்களை உருவாக்கும் தொழிலையும் மேற்கொள்ளுகின்றனர்.

இன்னும் நவீன உலகம் என்னென்ன வேண்டுகோளை விடுக்கின்றதோ அதற்கு விடை அளிக்க ஆயத்தமாய் இருக்கின்றார்கள். ஏறக்குறைய இலங்கையின் எட்டு மாகாணங்களிலும் இவர்களை காம் சந்திக்கின்றோம். இவர்கள் தம் சேவை தமக்குப் புகழ்மாலை சூட்டப்படுமா இல்லையா என்ற திருப்தியைக் காணவிடினும் உணராவிடினும் உயர்ந்த ஞானசீவியமும்அனுபவமுமுள்ள குருமாரால் மெச்சப்படுகின்றனர். விசேஷமாக எதற்காக? எவ்வித கஷ்ட சூழ்நிலையிலும் வசிக்கிறார்கள். பிரயாண வசதி காலநிலை வசதி, ஞான வாழ்வின் வசதியீனங்களைப் பொருட்படுத்தாமல் வீரத்துவமான பணி புரிகின்றனர். குருமார் பல ஆண்டுகளாக முயற்சித்த கருமங்களை இலகுவில் தீர்த்துவிடுகின்றனர்.

உலகம், திருச்சபை, கிறிஸ்துநாதர் அரசாங்கம் நமது பெற்றோர் நமக்குச் செய்தவைகளை நாம் உணரவேண்டும். கிறிஸ்துநாதர் நமக்கு என்ன செய்தார் என்பதை நாம் எல்லோரும் அறிவோம். அவ்வாறு அறிந்துவிட்டோமாயின் நாம் கிறிஸ்துநாதருக்கு என்ன செய்தோம்? என்ன செய்யவேண்டுமெனக் கேட்போமாக.

தியாக சிந்தையுடைய வீரத்துவமான இளம் உள்ளங்கள் இதற்கு என்ன பதில் அளிப்பார்கள்? உறுதியான தீர்மானம் எடுத்து அதில் மனந்தளராதிருக்கவேண்டும். உலகிலுள்ள கோடானுகோடி மக்களும் ஏன்? ஏனைய உயிர்கள் யாவும் தமக்காகவாழவே உழைக்கின்றது. ஏனையோருக்காக வாழ்வோர் ஆயிரத்தில் ஒருவர். அவ்வாறு உலகில் ஏனையோருக்காக வாழ்ந்து மரித்தோர் நாமங்கள் நம் உள்ளங்களில் அழியாது உயிருடன் வாழ்கின்றன. ஏன் நாம் அப்படி வாழக்கூடாது? ஏன் தியாகஞ் செய்யக்கூடாது? அவ்வளவு வீரத்துவம் எமக்கில்லையா? எல்லோரும் வாழ்வதுபோல நாமும் வாழவேண்டும் என்பது நியதியா?

திருக்குடும்ப கன்னியரைப்பற்றி
அறிய விரும்புவோர்

தகவல் அறிய:

சிரேஷ்ட தாயார்,
திருக்குடும்ப கன்னியர்மடம்
பெரிய வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அப்போஸ்தோலிக்க கார்மேல்சபை

## நீங்கள் சென்று சகலசாதி சனங்களுக்கும் நற்செய்தியை அறியச் செய்யுங்கள்

## யாவும் இறைவனின் மகிமைக்கே

கார்மேல்சபை செபம், தியானம், மௌனத்தில் ஒழுகித் திகழ்வது உலகம் அறிந்த உண்மை. கடவுள் நற்செய்தியைச் சொல்லாலும் செயலாலும் சாற்றச் சந்தர்ப்பம் இல்லை. இப்புனித தொண்டை ஆற்ற ஆயர் மாறி, எப்ரெம், O. C. D. அயராது அமலனை வாழ்த்தினர், மங்கயர் பலரிடம் பகிர்ந்தார்.

புதிதாகக் கத்தோலிக்க மறையிற் புகுந்த அயரா விசுவாசமும் சேவை செய்யும் அன்பும் கொண்ட செல்வி சொவ்வி பரற் அவர்கள் ஆயர் அவர்களின் விண்ணப்பத்திற்குச் செவிசாய்த்தார்.



ஆயர் அவர்களின் அயரா உழைப்பால் 1867ல் பிரான்சு தேசத்தில், பெயோண் நகரில் அன்னை வரோணிக்கா (சொவ்வி) அவர்களின் மேற்பார்வையில், நவகன்னியர் மடம் ஸ்தாபகம் செய்யப்பட்டது. 1870ல் மூன்று கன்னியர் பெயோலிலிருந்து பாரதம் நோக்கிப் படாதபாடுகள் பட்டு மங்களூரை அடைந்தனர். அவர்கள் புனித அன்னம்மாள் மடத்திற்தங்கி, நற்கல்வி புகட்டுவதிலே தம் வாழ்வைச் செலவிட்டதோடு மங்களூர் மங்கையரையும் சன்னியாச வாழ்வுக்கு வழிநடத்தினர். சுதேசிகளே மெய்யான மேய்ப்பர் என்பதையும் அறிவுறுத்தினர்.

பெயோனிலிருந்துவந்த கன்னியருள் ஒருவரான சகோதரி மரியேடேஸ் ஆஞ், சபையின் ஒழுங்குகளைத் திறம்பட அமைத்து சபையின் முதல் அதிசிரேஷ்டர் பதவியையும் வகித்துச் சபையைத் திறம்பட நடத்தியபெருமை அவர்களையே சாரும். அவர்களைத் தொடர்ந்து பாரதநாட்டுப் பவளமென மதித்துப் பெருமை கொள்ளக்கூடிய அதிவண. எலோசியா அன்னையர் பதவி ஏற்ருர். இவர்களின் காலத்தில் 1922ல் இலங்காபுரியில் திருமலை மாவட்டத்தில் முதல் அப்போஸ்தொலிக்க கன்னியர்மடம் ஆரம்பிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து இலங்காபுரியில் 19 மடங்கள் அனுதை மடங்கள், சிறுவர் பயிற்சி நிலையங்கள், சமூக நிலையங்கள், தையல் நிலையங்கள், கல்விச்சாலைகளென பலதிறப்பட்டன வாய்த் திகழ்கின்றன.

வடமாவட்டத்தில் 1948-ல் அச்சுவேலியில் முதல் மடம் திறக்கப்பட்டது. தற்போது மூன்றுமடங்கள் நற்செய்தி பரப்பி நிற்கின்றன.

அறிவொளி ஊட்டுவதே நோக்கமென ஆரம்பிக்கப்பட்ட சபை தற்போது குழந்தைகள் பராமரிப்பு நிலையங்கள், அனுதை நிலையங்கள், பாலர்களரிகள், தொழில்நிலையங்கள், தையல் நிலையங்கள், சமூக நிலையங்கள் இன்னும் பல முன்னேக்க தொண்டுகளையும், கல்லூரிகள், ஆசிரிய கலாசாலைகள், சர்வகலாசாலைகளையும் பாரதநாட்டில் வட, மத்திய, தென் உத்தர மாநிலங்களிலும், கோவா, இலங்கை, அவுஸ்திரேலியா, அந்தமான் தீவு, குவெற் (பார்சியா) ஆகிய நாடுகளில் நடத்தி வருகின்றது.

தற்போது அதிசிரேஷ்டர் தியடோசியா அன்னையர் அவர்களின் முற்போக்கும் விரிந்த மனப்பான்மையும், அயரா உழைப்பும், அழியா விசுவாசமும், பரந்தநோக்கும் சபையைக் கடுகுமணியின் உவமையைப் பூர்த்திசெய்கின்றது. அன்னையர் அவர்கள் தமதுசபையின் தலைமைப்பதவியை மாத்திரமன்று, பாரதநாட்டுக் கன்னியர் சபைகளின் மாமன்றத்தின் தலைவியாகவும் பரிசுத்த இறை தந்தையின் விசுவாசப் பரப்புதல் சபையின் அங்கத்தவராகவும் பதவிவகித்து வருகின்ருர்.

இன்று அப்போஸ்தொலிக்க கார்மேல்சபை மடங்கள் மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு மாநில அதிசிரேஷ்டரின் பரிபாலனத்தின்கீழ் செயற்படுகின்றன. இலங்காபுரியும் ஒரு மாநிலமாக அமைந்துள்ளது. அதன் பரிபாலகர் இலங்காபுரியின் முத்தென அழைக்கக்கூடிய சங். மோட் அன்னை அவர்கள்.

அப்போஸ்தொலிக்க கார்மேல் சபை, சாதி, இனமொழி வேறுபாடற்ற ஒரு சபை. எவரையும் எக்காலத்தும் ஏற்றுக்கொள்ளும். சேரவிரும்பும் கன்னியர்கள் எவரையும் இருகரம்நீட்டி அழைக்கும்.

சுயபாஷையில் கல்விபயின்ற மாணவிகள் இச்சபையிற் சேர விரும்பினுல் சபையின் பொதுமொழியான ஆங்கிலத்தைப் பேச எழுதக் கற்பிப்பார்கள். மேற்படி சபையிற் சேரவிரும்புவோர் கீழ்க்காணும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்:

சிரேஷ்ட தாயார்,
கார்மேல் மடம்,
88, கம்பல் பிலேஸ்,
கொழும்பு—10.

அல்லது,

சிரேஷ்ட தாயார்,
லங்கா மாதா மடம்,
அச்சுவேலி.

நாடுகளிடையே நற்செய்தியைப் பறைசாற்றி, நம்பிக்கையுடன் கிறீஸ்துவின் மறைபொருளை அறிவிக்க வேண்டும்.

சங். ஏடு 654-ம் பக்.

# கிறீஸ்துவின் இல்லறத் தூதுவர்

**அரசியலில் அலுவல்கிடைத்தால் பதவி என்கிருேம். பல்கலைக்கழகத்தில் உயர்நிலை பெற்ருல் பட்டம் என்கிருேம். இறைவன் பணியில் இடம் ஏற்ருல் அழைப்பு என்கிருேம்.**

**இறைப்பணி ஆற்றுவோரில் பலதிறத்தவர் உண்டு.**

**குருத்துவம் எனும் திருவருட்சாதனத்தால் குருவாய் உயர்ந்தோர்க்கும், நற்செய்தி கூறும் முத்திருநெறிகளைக் கடைப்பிடிக்கும் துறவியர்க்கும், இல்லறம்பூண்டு இறைப்பணிபுரியும் இல்லறத்தூதுவர்க்கும்,**

**இறை அழைத்தல் ஒன்றே.**

ஞானஸ்நானம், உறுதிபூசுதல் எனும் திருவருட்சாதனங்களால் பொதுநிலையினரும் மறைபரப்பும் பணிக்கு அழைக்கப்பெற்றவர் எனும் உண்மையை உணர்ந்து செயலாற்றும் காலம் இது. இல்லறத்தூதுவர் (மறை ஆசிரியர்) இல்லறம் காக்கும் பொதுநிலையினர் பக்கம் இருப்பினும், இறைபணிக்கென்றே தம்மை முழுதும் ஈந்தவர்கள். இவர்களின் தொழில் மறைத்தொண்டு புரிவதே. பள்ளிகளிலும், பங்குத்தளங்களிலும் மறைக்கல்வி புகட்டுவர். திருவழிபாட்டுத் திருப்பணிகளில் திருக்குடிமக்கள் திருத்தமுறப் பங்குபற்ற விளக்கமளிப்பர். இளைஞர்களுக்கு இறைப்பற்றும், மறைவாழ்வில் மாண்பும்பெற மன்றங்கள் அமைத்து அவற்றை நெறிப்படுத்துவர். பண்ணேடுபாடி பரமனைப் புகழ, பாடல்கள் பழக்குவர்; பங்குத் தந்தையர்க்குப் பக்கபலமாக இருந்து அவர்கள் தம் பணிகளிலெல்லாம் பெரிதும் உதவுவர்.

இத்தகையோர் பலர் யாழ்ப்பாணம், திருகோணமலை, கொழும்பு ஆகிய மறை மாவட்டங்களில் பணிபுரிகின்றனர். நம் யாழ்மறைவட்டத்தில் இப்போது தமிழகத்தில் பயிற்சிபெற்ற ஒன்பது பேர் பணியாற்றுகின்றனர். ஆறுபேர் பயிற்சிமுடிந்து வரவிருக்கின்றனர். "அறுவடையோ அதிகம் ஆட்களோ குறைவு" என ஆண்டவரின் குரலொலி மீண்டும் ஒலிக்கிறது. "படைப்பிற்கெல்லாம் நற்செய்தியினை அறிவியுங்கள்" என்று அறைகூவல் முழங்குகிறது.

நல்லாயன் யேசுவின் மந்தையில்சேர்ந்தும் சிந்தையில் கொண்டு வந்தனைபுரியாதோரும், அவரை இன்னும் அறியாதோரும் பலர். "தாங்கள் விசுவசியாதவரை எப்படி மன்ருடுவார்கள்; தாங்கள் கேள்விப்படாதவரை எப்படி விசுவசிப்பார்கள்; போதிப்பவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்" என வினவிடுக்கிருர் புனித சின்னப்பர்.



"பானையில் இருந்தால் அகப்பையில் வரும்" என்பர் ஆன்ருேர். எனவே இப்பணி புரிவோர்க்கு இறையியல் அறிவும் மறைப்பணிப் பயிற்சியும் இன்றியமையாதவை. இதற்கென தமிழகத்தில் இரு நிறுவனங்கள் பணிபுரிகின்றன. மூன்ருண்டுகள் இவற்றில் பயிலுதல்வேண்டும்.

தவமறை தழைக்க, இறையாட்சி ஓங்க, திருப்பணிபுரிய இளவல்களே வருக! வானரசைப் பரப்ப வாலிபர்களே வருக!! நற்செய்தித் தூதுரைக்க நல் இளைஞர்களே வருக!!!

தகவல்களுக்கு:

அருட்திரு.
எஸ். யே. இம்மனுவேல்,
110, பெரிய தெரு,
யாழ்ப்பாணம்.

# கொட்டாஞ்சேனை கன்னியர் மடத்தின் 100-வது வருட சேவையின் நிறைவு

1869-ம்ஆண்டு, கொழும்பு கொட்டாஞ்சேனையில் அயர்லாந்து தேசத்தவர்களாகிய நல்லாயர் கன்னியர் அறுவருடைய சேவையின் பயனுகத் தொடங்கப்பட்ட அக்கன்னியர்மடம் இம்மாதம் 15-ம்திகதி தனது 100வருட சேவையின் முடிவைக் கொண்டாடித் தேவனுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டது. கொட்டாஞ்சேனைமடம் இன்றுகொழும்புமாநகரின் பெண் பாடசாலைகள் அணியில் முதல்வரிசையில் விளங்குகின்றது. பலதிறப்பட்ட கல்வி, சமூக கலாச்சார சேவைகள் அங்கு நடைபெறுகின்றன. இந்நாட்டில் முதன்முதல் கொட்டாஞ்சேனை மடத்தில் வாழ்வு தொடங்கிய நல்லாயர் சபைக் கன்னியர் இன்று இந்நாட்டில் பல இடங்களிலும் தேவனுடைய திருத்தொண்டு நடாத்தி வருகின்றனர்.

# கருதினுல்மாரின் தொகை !36

பரிசுத்ததந்தை 35புதிய கருதினுல்மாரை நியமித்திருக்கின்ருர். இதனுல் கருதினுல்மாரின் தொகை 136ஆகின்றது. இத்தொகை கருதினுல்மார் எக்காலத்திலும் இருக்கவில்லை. 70 கருதினுல்மார் அடங்கிய குழுவாகவே கருதினுல்மார் பல நூற்ருண்டுகளாக இருந்தனர். ஆனுல் இத்தொகையை நூற்றளவாகக் கூட்டிவைத்தவர் 23-ம் அருளப்ப பாப்பரசரே. இப்புதிய கருதினுல் மாரின் நியமனத் திருச்சடங்கு இம்மாசம் 28-ம் திகதி நடைபெற இருக்கின்றது. புதிய கருதினுல் மாரில் எண்மர் இத்தாலியர், மூவர் பிரான்சியர், நால்வர் தென்அமெரிக்கர், இருவர் ஆபிரிக்கர், இருவர் ஸ்பானியர், அமெரிக்கர் நால்வர், ஸ்கொத்திலாந்து, பிலிப்பைன்ஸ், இந்தியா, கனடா, மெச்சிக்கோ, கவுற்றமாலா, கோறியா, ஜேர்மனி, சீனு, நியூசிலாந்து, ஒல்லாந்து முதலிய தேசங்கழல் ஒவ்வொருகருதினுல்மார்நியமனம் பெற்றிருக்கின்றனர். இதன்முன் கருதினுல்மாரின் நியமனம் 1967-ம் ஆண்டில் நடைபெற்றது.

## ஆடம்பர உடைகளுக்கும் உரைகளுக்கும் வத்திக்கான் முடிவு

### தொப்பியும் வேண்டாம் போர்வையும் வேண்டாம்

கருதினுல்களும், ஆயர்களும் தங்கள் உடையிலும் சடங்குகளிலும் ஆடம்பரமானவைகளைக் குறைக்க பரி. தந்தை 6-வது சின்னப்பர் ஒரு விசேட அறிவித்தல் கொடுத்திருக்கின்ருர்.

இரண்டாவது வத்திக்கான் சங்கத்தில் ஒலித்த குரலொலிகளின் நிமித்தமே பல மாற்றங்கள் படிப்படியாக வந்துகொண்டிருக்கின்றன. பல நூற்ருண்டுகளாக கருதினுல்மாரின் முக்கியத்துவம் திருச்சபைக்குள்ளும் புறமும் வளர்ந்துவந்ததுடன், அவர்களின் ஆரம்பர உடைகளும் வளர்ந்து வந்தது. ஆனுல் இவர்கள் தங்களுடைய மேய்ப்புப் பணியை நன்ருகச் செய்வதற்கு இவ்வாடம்பரம் தடையாயிருந்தது. ஆகையினுல் இவைகளைக் குறைக்கவேண்டுமென்று திருச்சங்கமும் அதைத்தொடர்ந்து ஆயர்குழுவும் வேண்டியது.

இந்த மாதம் 28-ம் திகதி புதிதாக உருவாக்கப்படவிருக்கும் 36 கருதினுல் மாரும் செவ்வட்ட தொப்பியை அணியமாட்டார்கள். நீண்ட சிவந்த போர்வையையும் சுமக்கமாட்டார்கள்.

அழைத்தலெனும் அருளை அதட்டுவது அதர்மம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சிலுவைக் கன்னியர்

**சபையின் தோற்றமும் தொடக்கியவரும் :**

இயற்கை எழில் நிறைந்தது சுவிற்சலாந்துதேசம். அங்கே மென்சிஞ்ஜென் என்றதொருகுக் கிராமம். பிரான்சிஸ்கன் சபைக் குருவாகிய வண. தியோடோசியஸ் புளொறென்டினி சுவாமிகள் இறைப்பணியாற்றி வந்தார். "கல்விபயிற்றும் திருச்சிலுவை கன்னியர் சேவையை உணர்ந்தார். 1884-ம் ஆண்டு இச்சபையை அங்கு நிறுவினர். 1901-ம் ஆண்டு பரிசுத்த தந்தை 13-ம் சிங்கராயர் இச்சபைக்குத் தம் அனுமதியை அருளினர்.

இச்சபையை அடியிட சங் பேர்னடா ஹைம்காட்னர் தாயார் துணைபுரிந்தார். முதல் அதிபரும் ஆனர். வீரம், விடாமுயற்சி, பரிசுத்தமுடன் பணி புரிந்தார். இவருக்கு முத்திப்பேறு பெற்ற பட்டம் அளிக்க தீவிர முயற்சி நடைபெறுகிறது.

**நோக்கம் :**

பிறர் அன்புக்காகத் தம் வாழ்வை இறைவனுக்கு அர்ப்பணம் செய்தல். கற்பு, கீழ்ப்படிதல், வறுமை ஆகிய மூன்று வாக்குத்தத்தங்கள் செய்து தம்மைப் புனிதப்படுத்தல்.

**பணிகள் :**


இளைஞருக்குக் கல்வியூட்டல், வைத்தியசாலைகளிலும், நோயாளர் வாழும் நிறுவனங்களிலும் அவர்களைப் பராமரித்தல், முதியோர் இல்லங்களை நடப்பித்தல், பாலர்களைத் தாலாட்டல், பெண்கள் விடுதி வீடுகளை நடப்பித்தல், தொழுநோய், க்ஷயநோயாளருக்குச் சிகிச்சை அளித்தல், இறை அன்புக்காகப் பிறர் அன்புப் பணிகள் புரிதல், புனித பிரான்சீஸ்குவின் முறையைப் பின்பற்றி, ஒன்று சேர்ந்து செபித்தல், செபத்தாலும் தியானத்தாலும் இறைவனோடு ஒன்றித்தல்.

**பயிற்சி :**

இச்சபையில் சேரும் இளம் பெண்கள் சிலமாதங்களைப் பரீட்சை (Probationers) நிலையிலும், அதன்பின் ஓர் ஆண்டு காலத்தை அபேட்சகர் (Postulants) நிலையிலும் வாழ்கின்றனர். இது முடிந்ததும் "நவகன்னியர்" (Novitiate) அதாவது பயிற்சிக்காலம் தொடங்கும். ஓர் ஆண்டு நீடிக்கும். இக்காலத்தில் சிறப்பாக ஞானவாழ்வில் பயிற்சி அளிக்கப்படும். தாங்கள் இப்பணிக்குத் தகுந்தவர்களா என்பதை ஆன்ம அதிகாரிகளின் துணையுடன் அறிகின்றனர். தங்களைத் தயார் செய்கின்றனர். ஒரே வித ஆடை அணிகின்றனர். முதல் வாக்குத்தத்தங்களைக் கொடுக்கின்றனர். கடமைகளும், உரிமைகளும் எல்லோருக்கும் பொதுவானவை. ஆறு ஆண்டுகளின் பின் நித்திய வாக்குத்தத்தம் கொடுக்கின்றனர். பயிற்சி நிலையம் யாழ்நகரில் கடற்கரை வீதியிலே உண்டு.

**தகைமைகள் :**

க. பொ. த. ப. (G. C. E.) பரீட்சையில் சித்திபெற்றிருக்க வேண்டும். ஆசிரியாக, மருத்துவிச்சியாக, தாதிமாராகத் தராதரப்பத்திரம் பெற்றிருப்போருக்கும் தகுந்த பணிகள் உண்டு. மேற்குறிப்பிட்ட தராதரப்பத்திரங்கள் பெறாதவர்களும் உண்மையான அழைத்தலும், சிறந்த நோக்கமும் கொண்டிருப்பின் விண்



ணப்பிக்கலாம். பிறப்பு, ஞானஸ்நானம், உறுதிப்பூசுதல், உடல் நலம், ஒழுக்கம் ஆகியவைபற்றிய 'சான்றிதழ்கள் சமர்ப்பிக்க வேண்டும். தகைமைகளைக் கண்டு உயர்தரப் பயிற்சிக்கும் அனுப்பப்படுவர்.

இன்னும் இவர்கள், இச்சபையின் ஒழுங்குப்படி தங்கள் 'ஆன்ம ஈடேற்றத்திற்காக மென்மேலும் முயற்சிசெய்கின்றனர். பிறருக்குப் பணிபுரிவதை இறைவனுக்கே செய்வதாக நம்புகின்றனர். சபையின் உபயோகமான அங்கத்தவர்களாக ஊழியம் செய்ய ஆசை இருக்கவேண்டும். இதற்கு ஓர் அளவு உடல் நலமும், உளநலமும், உண்மைப்பக்தியும், பிறரன்பும், மனமகிழ்வும், நல்லெண்ணமும் சாந்தகுணமும் அவசியம்.

**இலங்கையில் இக் கன்னியர் :**

கொழும்புத்துறை புனித சூசையப்பர் வயோதிபர் மடத்தைப் பராமரிக்கின்றனர். குருநகரில் பாலர் பகற்காலத்தாலாட்டுசாலை (Creche) பொறுப்பேற்று நடத்துகின்றனர். குருநகரில் கட்டுவைத்தியசாலையிலும், பொதுநலசேவை நிலையத்திலும் பணியாற்றுகின்றனர். இப்பகுதிகளில் வீடுகளைச் சந்தித்து மறைபோதனை புகட்டுகின்றனர்.

கொழும்பில் நோயாளர் இல்லம் இரண்டைப் பராமரிக்கின்றனர். மாணவிகள் விடுதிச் சாலையும் இவர்களுக்குண்டு.

நுவரேலியாவில் இக்கன்னியர் சுகநிலையம் ஒன்றை நடாத்துகின்றனர். குணமடையும் நோயாளருக்கும், ஓய்வுபெற விரும்பும் பெண்மணிகளுக்கும் இங்கு வேண்டிய வசதிகள் அளித்து வருகின்றனர்.

**சங். தலைமைத்தாயார்,**
திருச்சிலுவைக் கன்னியர்மடம்,
கடற்கரைவீதி,
யாழ்ப்பாணம்.

# அமல மரி தூதுவப் ப்ரித்தியாகிகள் பொதுநிலைக் கன்னியர்

**"பழையன கழிதலும்
புதியன புகுதலும்
வழுவன கால வகையினுனே"**

எனனும் பவணந்த முனிவர் கூற்றிற்கிசைய, சாதாரண உலகியல் தழுவிய வாழ்க்கையில் கன்னியர் வாழ்வதா? என நம்மவர் மூக்கில் விரல் வைக்கும் அளவிற்கு; நம் அன்னையாம் திருமறை நமது சகல தேவைகளையும் கண்காணிக்கிறுள். உலகில் பல "பொதுநிலைத் தொண்டர்" ஸ்தாபனங்கள் உள்ளன. அதில் ஈண்டு அறியத்தருவது யாழ் மறை மாவட்டத்தில் நிலவுகிற அங்கீகாரமும், ஆசீரும் பெற்ற "அமலமரி தூதுவப் ப்ரித்தியாகிகள்" பொதுநிலைக் கன்னியர் அழைப்புப்பற்றியதாகும்.

இந்த ஸ்தாபனமானது அருட்திரு தந்தை வண. லூயி மரி பறன் O.M.I., அவர்களால் பரிசுத்த தந்தை 12-ம் பத்திநாதரின் அப்போஸ்தொலிக்க ஒழுங்கு முறைகளைப் படித்து, பொதுச் சாதாரண வாழ்க்கையைத் தழுவிய சில இளம் பெண்களுடன் 1952-ம் வருடம் ஆடித்திங்கள் இரண்டாம் நாள் ஆரம்பிக்கப்பட்டது.

மகா மேன்மை தங்கிய எட்மன்ஸ்ரன் (Edmonston) மேற்றிராணியார் ஜேரமியோ கஞ்ஞோன் ஆண்டகை அவர்கள் இப்புது நிறுவனத்தைத் தமதுவிசேஷ பராமரிப்பில்ஏற்றுக்கொண்டார். அதேசமயத்தில்தமதுமேற்றிராசனத்தைச் சார்ந்த ஒருவைத்தியசாலையை நடத்தும பொறுப்பை அவர்களிடம் ஒப்புவித்தார். இப்படி ஆரம்பித்த இவ்விளம் பெண்கள் சகல வசதி நிறை சுகவாழ்வு நடத்தவில்லை. பொதுவில் சகல ஸ்தாபகமும் புன்னகையின் மறைவில் தாராளமுடன் ஏற்கும் தரித்திர நிலையிலேயே உருவானது. இவர்களின் தீவிர அங்கத்துவ விருத்தி 1962-ம் வருடம் மாசி மதி 2-ம்நாள் ரோமாபுரியின் அங்கீகாரம் பெற்ற புனிதத்துவத்தின் பூரணநிலை பெற உதவும் சபைகள் ஸ்தாபனங்களுள் ஒன்றாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1963-ம் வருடம் எங்கள் ஆயர் தந்தை இச்சபையை அடியிடும் நோக்கோடு சில பெண்களை இதன் பிறப்பிடமாக அமைந்த கனடா நாட்டிற்கு அனுப்பி இத்தாபனத்திடம் அவர்கள் ஞான, அப்போஸ்தொலிக்க பயிற்சி ஒப்புவித்தார். அவர்கள் கனேடிய பொதுநிலைக் கன்னியர் உதவியுடன் தாயகம் 1967-ம் வருடம் மீண்டு, யாழ் மறை மாவட்டத்தில் தங்கள் "புளிக்கார" வாழ்வை உலகின் மத்தியில் ஆரம்பித்துள்ளார்கள்.

இந்த ஸ்தாபனம் இன்று உலகில் இருபதிற்கு அதிக



மான நாடுகளில் தொண்டாற்றுகிறது. இப்படியான இந்த O. M. M. I. அங்கத்தினரிடம் திருமறை எதிர்பார்ப்பது மூன்று அம்சங்கள்:

**I. சர்வேசுரனுடைய மகத்துவத்தை வெளியுலகில் மேலோங்கச் செய்தல் :** இவ்வேலையை இறைவனை எல்லோரும் தங்கள் "பிதா" என அறியச்செய்து, யேசுவின் அருள் சீவிய உதவியுடன் அவர் அன்பின் பிள்ளைகள்போல் அவருக்காக வாழச் செய்யவேண்டும். இத்தேவ மகிமையை ஓங்கிடச் செய்யும் தீவிர ஆர்வமே அவவின் அப்போஸ்தல ஆவலின் ஊற்றாக இருக்கவேண்டும்.

**II. திருச்சபையின் வேலையில் பூரண பங்கெடுத்தல் :** திருச்சபை விரும்புவதை இவர்கள் விரும்ப வேண்டும். ஆகையால், குறிப்பிட்ட அப்போஸ்தொலிக்க சேவை முறையில்லை. திருச்சபையின் விருப்பப்படி எவ்விடமோ, எச்சூழ்நிலையோ, என்ன வேலையோ ஏற்கத் தயாராக இருக்க வேண்டும். எந்த வேலையின் மூலமும் சில ஆத்துமாக்களைத் தேவனிடம் அழைத்துச் செல்வது சாத்தியமாகும். எப்படியாயிருப்பினும் அவர்கள் தம்மிசைவாய் நாடிக்கொள்வது ஏழைகளையும், ஆதரவற்றவர்களையும், ஏனையோர் செல்ல முடியா இடங்களையுமாகும்.

**III. தன்மட்டில் ஆழ்ந்த உத்தமதனம் :** தேவசீவியத்தை ஞானஅப்பியாசங்கள், தியான சீவியம் மூலம் வளர்த்துத் தனது இருதயத்தில் இறைவனை அன்பு செய்யவும், மகிமைப்படுத்தவும் வேண்டும். தேவனை ஏனையோருக்கு அளிக்கத் தேவனால் நிறைந்திருக்க வேண்டும். இவை இல்லாவிடில் அவவின் அர்ப்பணிப்பு, அழகிய புன்சிரிப்பு, பிரசித்தமான அப்போஸ்தலத்துவம் யாவும் உபயோகமற்ற காட்சியாகும்.

இவர்கள் தரித்திரம், கற்பு, அமைச்சல், வார்த்தைப்பாடுகள் கொடுத்துத் தங்களை முழுதும் இறைபணிக்கு அர்ப்பணிக்கிறார்கள். இவர்கள் குறிக்கோள் (Motto) "மரியாய் மூலம் யேசுவின் பிறர் அன்பு" ("Charity of Christ Through Mary Immaculate")

விபரங்கள் வேண்டுவோர் :
தொடர்பு கொள்க :

இல. 5, அச்சகவீதி,
யாழ்ப்பாணம்.

## நன்றி

திவ்விய தேவநற்கருணையில் எழுந்தருளியிருக்கும் யேசுவின் திருஇரக்கத்தினுலும், அர்ச். தேவமாதா, செசிலியம்மாளின் மன்ருட்டுகளினுலும் அர்ச்சியசிட்டர்களது வேண்டுதலினுலும் தேவன் எங்களில் இரக்கம்வைத்து, நாங்கள் வேண்டிக்கொண்டதை பூரண திருப்தியடையும்படி தந்துள்ளார். அவரது நாமம் புகழப்படுவதாக.

ஓர் அடியாள் குடும்பம்
யாழ்ப்பாணம்

## அவர் நம்மோடு...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

டும் ஆராதனையுமாகும். முறையான இவ்வாராதனையில் நல்மனமாய்ப் பங்குபற்றுவோர், நம் நல்லமீட்பரால் கூறப்பட்ட சமாதானத்தைக் கண்டடைவோம். நிட்சயமாகவே நித்திய சம்பாவனையும் நம்மைக் காத்துக்கொண்டிருக்கும்.

**எஸ். கே. பத்திநாதன்**

ஊனையும், குருதியையும் பற்றிக் கவலைபடாது, (கலா. 1–46.) நற்செய்தி வேலைக்கு முற்றிலும் தன்னையே கையளிக்கும் வகையில், தன்னை அழைக்கும் கடவுளுக்கு மனிதன் பதில் தரவேண்டும்.........

(வத். சங். ஏடு.தி. ம. ப. 24.)

## திருச்சபையை சிலுவையில் அறையும் கிறிஸ்தவர்கள்

பரிசுத்தவாரத்தின் புதன் கிழமையும் வியாழக்கிழமையும் பரி. தந்தை திருச்சபையின் தற்போதைய நிலைமையைப்பற்றி இரண்டு காரசாரமான பேருரைகள் நிகழ்த்தினர். சிலுவையின் பாடுகளைப்பற்றிப் பேசுகையில் மனம்நொந்து கூறினர்: "அமைதியற்ற, குறைகூறும், அடங்காப்பிடாரிகள் போல். திருச்சபையின் மத்தியில் புரட்சி எழுப்பும் சில குருக்களும் பொதுநிலையினரும் தங்களுடைய அவமானமான நடத்தையினுல் திருச்சபையை மீண்டும் சிலுவையில் அறைகின்றனர்."

பரிசுத்தவார விடுமுறை நாட்களை புனிதநகரில் கழிக்க வந்த சனத்திரளைப் பார்த்து, "நீங்கள் விடுமுறை நாட்களென்று சொல்லி, சந்தோஷப்படுகிறீர்கள். ஆனல், திருச்சபையோ — தொடர்பாக—பிரச்சினைகளிலும் பிரலாபத்திலும் மூழ்கியிருக்கின்றது. கிறிஸ்து அனுபவித்த பாடுகளையும் மரண வேதனையையும் திருச்சபை அனுபவிக்கின்றது. பாடுபடுத்துபவர்கள் பலவிதப்பட்டோர்— உள்ளே உள்ளவர்களும் வெளியே இருப்பவர்களும்."

"திருச்சபையின் பாரம்பரியத்திலே உண்மையான செல்வங்களென்றும், ஒற்றுமையுடையவும் அன்பினுடையவும் ஆதாரங்களென்றும் கருதப்பட்டவைகளே இப்போ தாக்குதல்களுக்கு உள்ளாயிருந்தால், நாம் எப்படி ஒற்றுமையான சமாதானமான சமுதாயமாக கிறிஸ்துவுக்குச் சாட்சியம் கொடுக்க முடியும்?" என்று வினவினர்

அறுவடையோ மிகுதி வேலையாட்களோ சொற்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மகளிர் மன்றம்

**அன்புடை நேயர்களே வணக்கம்!......**

**சோதரிகளே !**

சிறுமியொருத்தி துறவறத்தில் இணைந்து கர்த்தருக்கு சேவைசெய்ய விரும்பினாள்; எக்காரணத்தாலோ கன்னியர் மடங்கள் அனைத்தும் அவளுக்கு கதவடைப்புச் செய்தன. துயரங்கொண்ட அச்சிறுமி பாப்பரசரைச் சந்தித்தாள்.

அப்படியா சமாச்சாரம். இறைவனுக்குச் சேவைசெய்யவிரும்பினால் நீயே ஒரு கன்னியர்சபையை ஆரம்பிக்கலாமே என்றார் பரிசுத்த தந்தை. ஐரோப்பாவில் பலகன்னியர்சபைகள் இருக்கின்றனவே என்றாள் சிறுமி. அப்படியானால் அமெரிக்காவுக்குப் போ எனப் பதில் வந்தது;

வயது வந்ததும் அமெரிக்கா சென்றாள் பிரான்சிஸ் சேவியர் கபிரீனி என்ற அந்தப்பெண். புதியதோர் கன்னியர் கழகத்தை உருவாக்கினாள். பாடசாலைகள், உயர்கல்லூரிகள், அனாதையர் இல்லங்கள், வயோதிபர் மடங்கள், மருத்துவ மனைகள் எனப்பல நிறுவனங்களை மக்கள் சேவைக்காக உருவாக்கினாள். அவளது அடியார்களான கன்னியர்கள் இன்றுவரை அந்நிறுவனங்களைத் திறம்பட நிர்வகிக்கின்றனர்.

கபிரினி தாயாரின் 67-வது வயதில் ஒருகுருவானவர் அவளைச் சந்தித்தார். அப்போது அவள் நிர்வாகித்த நிறுவனங்கள் தொகை 67; ஒவ்வொரு ஸ்தாபனமும் பத்து லட்சம் ரூபாவுக்குமேல் மதிப்புடையவை.

எவ்விதம் இந்த அரியசாதனைகளைச் செய்துமுடித்தீர்கள் என அந்தக் குருவானவர் வியப்புடன் கேட்டார். இன்று அர்ச்சியசிட்டராக விளங்கும் அந்த அம்மையார் அமைதியாகக் கூறினார்:— "வல்லபமிக்கவர் பெருமை உள்ளவைகளை என் மூலம் செய்தருளினார்."

கடந்தவாரம் தூய ஆவியானவரின் வருகையைக் கொண்டாடினோம்; அவரது துணையுடனும் அன்பர் யேசுவின் ஆசியுடனும் எங்கள் கருமங்களைத் தொடக்குவோம், அவை ஆச்சரியமாகப் பலன்தரும்.

ரோஜா

# மங்கையர் திலகம் மோணிக்கா

**வைகாசி நாளில் :**

வைகாசித் திங்கள் நாலாம் நாளில் திருச்சபை புனிதையான மோணிக்கம்மாளுக்கு விழா எடுத்து மகிழ்கிறது. வேதபாரகருள் ஒருவராக எண்ணப்படும் புனிதர் அகஸ்தீனின் அன்னைதான் இந்த மோணிக்கம்மாள். ஊதாரிப் பிள்ளைகளாக இறைவனின் பாதையிலிருந்து வழுவிச் சென்ற புதல்வர்களையெண்ணித் துன்பங்கொள்ளும் அன்னையரின் பாதுகாவலாளியாக சத்திய திருச்சபை மோணிக்கம்மாளுக்கும் கௌரவம் தந்திருக்கிறது.

**துன்பத்தின் எல்லையில் :**

வட ஆபிரிக்காவைச் சேர்ந்த தாகஸ்தே என்ற கிராமத்தில் பிறந்தவள் இந்தப்புனிதை. கத்தோலிக்க குடும்பத்தில் பிறந்தாலும் புகுந்த இடம் பிறமதத்தவரினது. பற்றிசியஸ் என்ற அவள் கணவன் மிலேச்சத்தனம் நிரம்பியவன். அவனது நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் மோணிக்காவுக்கு துன்பமும் இன்னலுமே தந்தன. அவனுக்கு ஒரு தாயார் இருந்தாள், தனது மருமகளுக்கு அவள் செய்தகொடுமைகளோ சொல்லியடங்காது.

**ஜெபத்தின் ஆதரவில் :**

மோணிக்கா பொறுமைமிக்கவள். தனது துயரங்களை மூறையிடவில்லை. அடுத்தவர்க்கு அன்புகாட்டினாள். தூற்றியவருக்கு பணிவுடன் சேவைசெய்தாள். தினசரி பூசை, செபத்தியானம் இரண்டும் அவளது நொந்தமனதுக்கு ஆறுதல் தந்தன. **நாவை அடக்கு. அன்பு செய்; சகலதும் உன்காலடியில் வந்துசேரும்** என்ற மொழியை கடைப்பிடித்தாள்.

**முயற்சியின் திருவினையில் :**

காலவெள்ளத்தில் சிலஆண்டுகள் கடந்தோடின. மாமியார் மெச்சிய மருமகள் ஆகிவிட்டாள் மோணிக்கா. மருமகளின் அன்புவெள்ளத்துக்கு அடிமையானாள் மாமியார். இன்னும்பல வருடங்கள்சென்றன. மிலேச்சன் பற்றிசியஸ் கத்தோலிக்கமதத்துள் இணைந்தான். அன்புமனைவியை மனமாற நேசிக்கத் தொடங்கினான். காலம் மாறிவிட்டது. நம் கவலைகள் யாவும் தீர்ந்துவிட்டது என்று மகிழ்ந்தாள் நம் புண்ணியவதி. ஆயின் புதிய இன்னல்களின் சாயல் தொலைவில் தெரிந்தன.

**திருமகனின் நாத்திகத்தில் :**

மோணிக்காவின் இல்லறப் பூங்காவில் மூன்றுமலர்கள் பூத்துக்குலுங்கின. அவற்றுள் ஒன்று, அகஸ்தீன். அவரது கல்விச்சிறப்பு அன்பின் அன்னைக்கு பெருமிதம் தந்தது. உலகம் வியக்கும் பேராசிரியர் அகஸ்தீன் கல்விகேள்விகளில் சிறந்து விளங்கினர்.

ஆனால் நாத்திகத்தின் எல்லைவரைக்கும் சென்றார். தீயசெயல்களின் உறைவிடமாக விளங்கினார். கணவனை இழந்த கைம்பெண் மோணிக்காகலங்கினாள். ஊதாரிப்பிள்ளையைத் திருத்த உறுதிகொண்டாள்.

**கண்ணீரும் கம்பலையும் :**

குருமாரிடம் முறையிட்டாள். குறை தீரவில்லை. மேற்றிராணியாரிடம் சென்றாள். அவரது வாதப்பிரதிவாதங்கள் அகுஸ்தீனின் திறமையின் முன் எடுபடவில்லை. கண்ணீரும் கம்பலையுமாக கதறினாள் இறைவனிடம். இவ்வளவு கண்ணீரும் பிரார்த்தனைகளும் இறைவன் சந்நிதியில் கேட்கப்படும் என்று உறுதியளித்தார் மேற்றிராணியார். புதல்வனை எந்நேரமும் பின்தொடர்ந்தாள். அன்பின் அன்னை [illegible] றினார் அகஸ்தீன் ஒருமுறை. வயதுசென்ற மோணிக்கா தயங்கவில்லை. அடுத்தகப்பலில் துணிவுடன் அகஸ்தீனைப் பின்தொடர்ந்தாள்.

**இருளுக்குப்பின்னேஒளி :**

மோணிக்காவின் குரல் இறைவனின் சந்நிதிக்கு எட்டியது. அகஸ்தீன் தந்தையின் இல்லத்தை திரும்பிப் பார்த்தார். தனது தீயசெயல்களை எண்ணியெண்ணிக் கண்ணீர் பெருக்கினார். அன்னை மோணிக்கா ஆனந்தக்கண்ணீர் வடித்தாள். ஆபிரிக்கா திரும்ப நாவாயை எதிர்பார்த்து இருவரும் ஒஸ்ரியாவில் காத்திருந்தவேளை. மோணிக்கா அருமைப்புதல்வன் மடியில் தன்தலையை வைத்தபடியே பாக்கியமான தன்னுயிரை இறைவனிடம் ஒப்படைத்தாள்.

# சரோ வந்தால்? ....

"கனலி"

(சமையற்காரிப்|பிரச்சினை பற்றிய சிறு கதை)

அம்மா... பணிவு, ஆர்வம், வினை மூன்றையும் கூட்டிக் குழைத்த கலவையாய் ஒலித்த மூன்றெழுத்து என்னைச் சிந்திக்க வைத்தது மட்டுமல்ல, திகைக்கவும் செய்தது.

சோம்பல்... அசட்டை, மறதி, தூக்கமின்மை... இத்தனைக்கும் மத்தியில் உழன்றுகொண்டே வாழ்க்கைச் சகடத்தை, ஆயுள் பாதையில் செலுத்திக்கொண்டிருக்கும் எத்தனையோபேர்களில் நானும் ஒருத்தி.

எங்கள் வீட்டுச் சமயல்கார அம்மாளின் பெயர் சரோஜா. நாங்கள் சுருக்கமாக அழைப்பது சரோ என்று. பொழுது விடிந்தால், சரோ! பற்பொடி எங்கே? என் பேஸ்ட் எங்கே காணோம்? சரோ, குளிக்க வெந்நீர் போட்டாயா? சரோ, ஏன் இன்னும் பெட் காப்பி வரவில்லை? சரோ, எனக்குத் தலைவாரிவிடு. சரோ, சமையல் ஆகிவிட்டதா? சரோ, காலைப் பலகாரம் ஆகிவிட்டதா? சரோ பால் வந்துவிட்டதா?... இப்படி எதற்கெடுத்தாலும் சரோ புராணம். சரோவும் முகங்கோணமல் அத்தனைபேர் வேலைகளையும் உடனுக்குடன் நிறைவேற்றுவாள். அப்படிப்பட்ட சரோ இன்று தன் சொந்த ஊருக்குச் சென்றுவர அனுமதி கேட்கிறாள் என்றால் நான் திகைக்காமல் என்ன செய்வது? இத்தனை வேலைகளையும் என்னால் எப்படிச் சமாளிக்க முடியும்?

எனக்குச் சமையற்கட்டில் பக்கம் போகவே நேரம் கிடைக்காதே. காலை உணவு முடிந்தவுடன் முதல்நாள் வந்த கடிதங்களுக்குப் பதில் எழுத உட்காருவேன். உடனே டக், டக், என்று கதவை இடிப்பார்கள். யாராவது வந்து காலத்தைக் கரைய வைத்துவிட்டுப் பதினொரு மணிக்குத்தான் எழுந்து செல்வார்கள். எல்லோரையும் திருப்தி செய்வதுதானே சமூக சேவையின் கடமையாக இருக்க வேண்டும்! வேலை குவிந்து கிடக்கிறது போய் வாருங்கள் என்று கூறி விரட்டி அடிப்பதற்கு நீண்டநேரம் தேவையில்லை. மனிதாபிமானமும், தன்மான உணர்ச்சியும் தந்த எச்சரிக்கைக்கு முன் என் சக்தி தோற்றுத்தான் போய்விடுகின்றது. சிறுவயதுமுதல் என் அல்லி ராச்சியத்தைக் கண்ட என் பெற்றோர்கள், நெருங்குவதற்கு அரியள் என்று எனக்குக் "கனலி" என்று பெயரிட்டனர். ஆனால் எப்போதும் மக்கள் நெருக்கத்திலேயே வாழ வேண்டுமென்பது என்னைப் படைத்தவர் திட்டம் போலும்? மக்கள் காலத்தைக் காசாக்கப் பரபரக்கும் இந்தக் காலத்திலும், காலத்தின் அருமையை உணர்ந்துகொள்ளாத மக்களும் வாழ்கின்றார்களே என்று நினைக்கும்போது அழுவதா சிரிப்பதா என்று எண்ணுவேன். சிரிப்பைவிட எனக்கு அழுகைதான் மிஞ்சும். என் சுயநலச் சிறைக்குள் சரோவைக் கைதியாக்க நான் விரும்பவில்லை.

சரோ ஊருக்குப் போய்விட்டாள். பூசை முடிந்து 6 மணிக்கு வீட்டுக்கு வந்து காப்பி போட்டேன். அவரவர்க்கு வேண்டிய பொருள்களை யெல்லாம் எடுத்து எதிரே வைத்தேன். பெட் காப்பி சாப்பிடுபவர்களுக்கு நேரத்தோடு காப்பி கிடைத்தது. ஒரே மகிழ்ச்சி. அனைவர் வாயும் சர் என்று திறந்து மூடிக்கொண்டது. சரோ இல்லாதது மட்டுமல்ல, அவரவர்க்கு வேண்டிய பொருள் எதிரே தயாராக இருந்தது. அனைவரும் காலைச் சாப்பாடு முடிந்து வெளியேறினர். மணியைப் பார்த்தேன். காலை 7-30. இத்தனை வேலையையும் 1-30க்குள் எப்படி முடிக்க முடிந்தது என்று எனக்கே வியப்பாக இருந்தது. பொறுப்புணர்ச்சி மனிதனை எப்படி இயங்கவைக்கிறது! கல்லைக் கனியாக்கும் இரசவாதம் கடமையிலும் பொறுப்புணர்ச்சியிலும்தான் உண்டு போலும்! வீட்டில் ஆங்காங்கே குவிந்து கிடந்த குப்பைக் கூளங்களை அகற்றி, இறைந்துகிடந்த சாமான்களையெல்லாம் ஒழுங்காக அடுக்கிவைக்க மணி 9 அடித்தது. வீடு அலங்கரித்துவைத்த மணப்பெண்ணைக் காட்சிதந்தது. 11 மணிக்குள் பகலுணவு தயாராயிற்று. இன்று என்ன சமயலுக்கு இத்தனை சுவை; எல்லோருக்கும் ஒரே வியப்பு!

வேலை மடமடவென்று முடிந்தது. உடைகளைத் தவைக்கவும் நேரம் கிடைத்தது. உடைகள் எவ்வளவு வெளுப்பாகவும் சுத்தமாகவும் இருந்தன! சரோ இருந்தபோது இவ்வளவு தூய்மையில்லையே! இடையிடையே வந்த வேண்டாத விருந்தினர்கள், சரோ இல்லையா? வேலையிருக்குமென்று கூறிக்கொண்டே வந்தவழியே திரும்பிச் சென்றனர். பகற் சாப்பாட்டிற்குப்பிறகு சிறிது ஒய்வெடுக்கலாம் என்று படுத்தேன். அம்மாடி, எவ்வளவு சுகமான நித்திரை. இரவும் படுத்தவுடன் உறக்கம். மறதி மாயமாய் மறைந்துவிட்டது. அசட்டை அகன்றுவிட்டது. சுறுசுறுப்பு ஒரே சுறுசுறுப்பு. 15 நாட்கள் ஓடிவிட்டன.

நாளை?

சரோவந்துவிடுவாள் மீண்டும் சரோ புராணம்!

எனக்கு அசதி மறதி சோம்பல், தூக்கமின்மை...

வீட்டில் வேலைக்காரர்கள் இல்லாவிட்டால் ஒருவகையான தொல்லை. இருந்தால்வேறுவகையான தொல்லை. இது தீர்க்கமுடியாத குடும்பப் பிரச்சினை.

—சர்வவியாபி

# இங்கே இப்படி, அங்கே அப்படி

விரிந்துபரந்த உலகு. அதில் வாழும் கோடானுகோடி சீவராசிகள், கலக்கமற்ற உள்ளம்; கவலையற்ற வாழ்க்கை. உன்னதரின் உன்னத சிருட்டிப்பானவன் மனிதன், தன்சாயலாக ஆக்கினார் அவனை. பாக்கியமான நிலைமை, நோயற்ற வாழ்வு; கவலையற்ற சீவியம், ஆனால், ஒரு கட்டளை. தட்டிக் கழிக்கப்பட்டது. கட்டளை ஆத்திரம் கொண்ட சாத்தானால், கவலையற்ற வாழ்வு கணப்பொழுதில் மறைந்தது மனிதனைவிட்டு. நோய் என்ற அவலக்குரல்—பசிஎன்ற ஏக்கம்—சாவு என்ற முடிவு. ஆனால், ஜீவராசிகள்மட்டும் கவலையற்ற வாழ்க்கை நடாத்திவருகின்றன.

மகத்துவ கடவுளின் உன்னத படைப்பான மனிதன் இன்று வாழும் வாழ்க்கையை நோக்கின் விசித்திரமாகவே தோன்றுகிறது. அறுசுவை உண்டி உண்டு ஆடம்பர வாழ்க்கை நடாத்துகிறான் ஒருவன், ஆனால், அரைவயிற்றுக்கஞ்சிக்குக்கூட ஐயா, அம்மா என்று அவலக்குரல் எழுப்புகிறான் ஒருவன், அவனும் மனிதன் தான். எட்டடுக்கு மாளிகை அங்கே— மரநிழல் வாழ்வு இங்கே. பஞ்சணையில் படுத்தும் தூக்கம்வாரது துடிக்கும் மனிதன் அங்கே— பத்திரிகைத் துண்டில் பாதையோரத்தில் நிம்மதியுடன் படுத்துறங்கும் ஏழை இங்கே. கம்பளி போர்த்தும் கண்ணுறக்கம் வரவில்லை. கந்தையால் உடலை மூடி களிப்புடன் துயில்கிறான் மற்றவன். கண்ணீர்வடித்துக் கையேந்தி நிற்கிறான் ஒட்டிய வயிற்றுடன் கொட்டாவிவிட்டு அங்கே. காலால் தட்டியே உணவைக் கொட்டிவிட்டு இன்புறுகிறான் இங்கே. பசி பசி என்று பல்லவி பாடும் கூட்டம். ஏன் பட்டினியால் மாண்டவர் என்று பத்திரிகைகள்கூட கொட்டை எழுத்துகளில் செய்தி வெளியிட்டது. ஆனால், மட்டுக்கு மிஞ்சிப் புசித்ததால் இட்டுமுட்டுப் படும் உணவுப் புலிகள்கூட்டம்

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசும் பேழை

**உறவின்முறையார் :**

முற்காலத்தில் சில இல்லறத்தோரும பாப்பரசர்களாகத் தெரியப்பட்டனர் அல்லவா? இவர்களுள் ஒருவர் பத்தொன்பதாம் அருளப்ப பாப்பரசர். இவர் எட்டாம் ஆசீவாதப்ப பாப்பரசரின் சகோதராராம். ஒன்பதாம் ஆசீர்வாதப்ப பாப்பரசர் இந்தச் சகோதரரின் மைத்துனராம்.

**பணக்காரி ஆனலும் :**

ஏழைகளின் சகோதரிகள் என்ற கன்னியர் சபையை அடியிட்டவள் பணக்காரக் குடும்பத்தில் பிறந்த கிளேயர் என்பவள். இவள் பதின்மூன்றும் நூற்றாண்டைச் சேர்ந்தவள்.

**ஆண்டவரின் சிலுவை :**

ரோமாபுரியிலுள்ள மேரிமஜோர் தேவாலயத்தில் நமதாண்டவர் அறையுண்ட திருச்சிலுவையின் ஒருபகுதியை ஒரு வெள்ளிக்குருசில் பொருத்திவைத்திருக்கிறார்கள். கடந்த பெரிய வெள்ளிக்கிழமை பாப்புதந்தை சின்னப்பர் வெறுங்கால்களால் நடந்து சென்று மும்முறை முழங்காலில் விழுந்து ஆராதித்தபின் அச்சிலுவையை பக்தியோடு முத்தமிட்டார்.

**முதல்பூசை :**

அமெரிக்கா கண்டத்தில் 1526-ம் ஆண்டில்தான் திவ்வியபூசை முதல்முதல் சொல்லப்பட்டது. அங்கிருந்த ஸ்பானியர்கட்காக டோமினிக்கன் சபைக்குரவரொருவர் பூசையை நிறைவேற்றினர்.

**நாணயசாலை காலி :**

மத்திய நூற்றாண்டுக் காலங்களில் ரோமாபுரியின் மத்தியில் இருக்கின்ற புனிதஆஞ்சலோ கோட்டைதான் பாப்பரசரின் நாணயசாலையாக விளங்கியது. பொன்னும், மணியும் மின்னும் வைரங்களுமாக பிரகாசித்த இந்தக் கோட்டை காலியாக இப்போது காணப்படுகிறது.

**தங்க மோட்டார் :**

பிரபல ஆங்கில சினிமாநடிகரும் பாடகருமான எல்விஸ் பிரிஸ்லியை ஆங்கில திரைப்படநேயர்கள் அறிந்திருப்பார்கள். முன்னர் இராணுவத்தில் கடமையாற்றிய இவர் சினிமாநடிகராகி சொற்பகாலத்துள் கோடீஸ்வரராகி விட்டார். இப்போது முற்றிலும் தங்கத்தாலான எல்லா வசதிகளையும் கொண்ட ஒரு மோட்டார்வண்டியை எல்விஸ் வாங்கியுள்ளார். இதன் நிறை மூன்று தொன்கள். இந்தவண்டியை நியூசிலாந்திலுள்ள ஒரு குருவானவரின் வேண்டுகோளுக்கிணங்க சிலகாலத்துக்கு நியூசிலாந்துக்கு அனுப்பியிருக்கிறார் எல்விஸ். இந்த மோட்டாரை எல்விஸ் ரசிகர்கட்கு காட்சிக்குவைத்து அதனால் சேகரிக்கப்படும் பணத்தை ஏழைகள் நிவாரண நிதிக்காக அக்குருவானவர் உபயோகிப்பாராம்.

**இல்லறத்தரசிகளின் பாதுகாவலர் :**

புனித லாசரஸ் கிறிஸ்துநாதரின் அபிமானத்தை பெற்றவர். மார்த்தாளும் மரியாளும சாட்சியாகவிருக்க இறந்த லாசரை உயிர்ப்பித்தார் கிறிஸ்து. இந்த லாசரஸ் திருச்சபையால் இல்லத்தரசிகளின் பாதுகாவலராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

**நீக்ரோ மேற்றிராணியார் :**

இன்று சத்திய திருச்சபையில் கணிசமான அளவுக்கு கருப்பர்களான நீக்ரோக்கள் மேற்றிராணித்துவ பதவியை வகித்துவருகின்றனர். திருச்சபை நிறபேதம் காட்டுவதில்லை. இது அக்காலத்திலிருந்தே நிரூபிக்கப்பட்டுள்ளது. மேற்றிராணித்துவ பதவிக்கு தெரிந்துகொள்ளப்பட்ட முதலாவது நீக்ரோஎன்ற பெருமை என்றிக்கு மேற்றிராணியாரைச் சேரும். இவர் 1521-ல் பத்தாம் சிங்கராய பாப்பரசரால் அபிசேகிக்கப்பட்டார்.

**முழுச்செபமாலை :**

பெல்ஜியத்தில் பானேக்ஸ் என்னுமிடத்தில் 1933-ல் மரியன்னையின் யாத்திரைத்தலம் ஒன்று நிறுவப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை தினமும் மாலைவேளைகளில் மக்கள் ஆங்குகூடி முழுச்செபமாலையையும் ஒதிவருகிறார்கள். இரண்டாவது உலகமகா யுத்தத்தின் பயங்கரநாட்களில் கூட இம்முயற்சிகைவிடப்படவில்லை.

## எதிர் பார்க்கவும்!

மேற்றிராசனக் குருக்கள், அமலஉற்பவ பரித்தியாகிகள், இல்லறத்தூதுவர் இவர்களைப் பற்றி காவலனின் அடுத்த வெளியீட்டில் காண்க;

## இங்கே இப்.....

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

மறுபுறம். இத்தனை கேலிக்கூத்துகளும் எங்கே நடைபெறுகின்றன? ஆம், மனித உள்ளம் படைத்த மானிடர் மத்தியில்தான். உன்னைப் போல் உன்......என்ற யேசு போதனை எங்கே? உங்களைப் பகைக்கிறவர்களை அன்பு செய்யுங்கள். உன் அங்கியைக் கேட்பவனுக்கு உன மேலாடையையும் கொடு. மகத்துவ கடவுளின் சாயலான மானிடரே நாம் சிந்திப்போம் இவற்றை.

அப்போதுதான் மிகுந்த வல்லமையுடன் மகத்துவ கடவுள் வரும்போது நான் பசியாயிருந்தேன் போசனம் தந்தீர்கள். தாகமாயிருந்தேன் பானம் தந்தீர்கள். ஆடையற்றிருந்தேன் ஆடையளித்தீர்கள். இல்லிடமற்றிருந்தபோது இல்லிடம் அளித்தீர்கள். பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கும் மோட்ச இன்பத்தைச் சுதந்தரிக்க வாருங்கள் என்று நம்மை அழைக்கும்போது நாம் பாக்கியசாலிகளாக விளங்குவோம். "மண்ணுயிருக்கிறாய் மீண்டும் மண்ணுவாய்" என்ற பொன்னனவாக்கையும் நாம் எண்ணி வாழ்ந்தால் நன்மையடைவோம்.

இ. பேர்ணட்

## அவர் நம்மோடுபேசி, வேத வாக்கியங்களை நமக்குத் தெரிவிக்கும்போது நம்முடைய இருதயம் நமக்குள் பற்றியெரிந்து கொண்டிருந்ததல்லவா?

(பரி. லூக். 24-ம் அதி. 32-ம் வச.)

அல்லேலூயா! யாவரும் பாக்கியமான — புனிதமான அல்லேலூயா கூறக்கடவோம். ஏனெனில் நம்மீட்பர் மெய்யாகவே உத்தானமாயினர், அல்லேலூயா. எம்மா ஊருக்குப் போன சீஷரின் இதயம் எவ்வாறு சிநேகக் கொழுந்துவிட்டு எரிந்ததோ, அவ்வாறு இன்று நம் இதயங்களும் அவரின் பாடுகளில், அவரின் மரணத்தில், அவரின் திருப்பலியில், பலிப்பொருளில் உண்மையாகவே அவரின் உத்தானத்தில் பங்குபற்றி, அவரின் சிநேகத்தில் பற்றியெரிய வேண்டும் அல்லவா?

அப்படியான தேவசிநேகத் தகனிப்பு எப்போது அச்சீஷரிடத்தில் உண்டானதென்பதைக் கவனிப்போம். நம்இரட்சகர் உயிர்த்தெழுந்த அன்று தம்மைப் பற்றிக்கூறிய வேத வாக்கியங்களை அவர்களுக்குத் தெரிவிக்கும்போதுதான் அந்நிலை அவர்களிடத்தில் உண்டானது. ஆம், வேதவார்த்தைகள் தேவ வார்த்தைகளே. எம்மா ஊர்போன அச்சீஷர்களோடு உயிர்த்தெழுந்த நம் கர்த்தரே சம்பாஷித்தார் அல்லவா? எவ்வளவு பாக்கியம் பெற்றவர்கள்! அப்பாக்கியம் அவர்கள் இதயத்தின் விசுவாச ஒளியினால் கிடைத்தது. எப்படியெனில் (பரி. லூக். 24-ம் அதி. 21-ம் வச.) நாங்களோவென்றால் "இஸ்ராயேலைமீட்டு இரட்சிப்பவர் அவர்தான்என நம்பியிருந்தோம்" என்று அவருடனே சம்பாஷிக்கிறார்கள். ஆனால் விளக்கக் குறைவானவர்களாகவும், உயிர்த்த நம்மீட்பரைக் கண்டுபிடிக்க முடியாதவர்களாகவும் இருந்தனர். ஆனால் நம்மீட்பரோ அவர்களுக்குத் தம்மைப்பற்றித்தீர்க்கதரிசிகளால் கூறப்பட்ட வேதவாக்கியங்களை விளக்கி, தேவசிநேகத்தைமூட்டி, பலிப்பொருளாகிய அப்பத்தை ஆசீர்வதித்துப் பங்கிட்டுக்கொடுத்து அவர்கள் ஞானக்கண்களையும் திறக்கச் சித்தங்கொண்டார். 25-ம், 26-ம், 27-ம் வசனங்களின்படி, "மதியீனரே! தீர்க்கதரிசிகள் வசனித்த யாவையும் விசுவசிப்பதற்கு மந்தஇதயம் உள்ளவர்களே!" என்று அழைத்து தம்மைப்பற்றி ஆயிரக்கணக்கான வருடங்களின் முன் தீர்க்கதரிசிகளால் வசனிக்கப்பட்டவற்றை விபரித்துக் காட்டுகிறார். உண்மையாகவே வேதாகமத்தை வாசியாமல் இருக்கிற நாங்களும் எம்மை நாமே மந்தபுத்தியுள்ள மதியீனர் என்று அழைக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். வேதாகம வாசிப்பு நம்மை இறைவனுடன் ஒன்றிக்கச் செய்து, அவர் சிநேகம் நம் இதயங்களில் கொழுந்துவிட்டெரியச் செய்கிறது, செய்யும். அப்போது நாமும் எம்மாவூர்ச் சீஷர் சொன்னதுபோல் 'அவர் வாக்கியங்களை நாம் வாசித்து விளங்கும்போது எமது உள்ளங்களும் தேவசிநேகத்தால் பற்றியெரிகிறதல்லவா'? என்று கூறும்பாக்கியம் பெறுவோம்.

இறைவாக்கு எப்படிநம் உள்ளங்களைத் தகனிக்கிறதோ அப்படியே தேவநற்கருணையாகிய ஜீவிய அப்பமும் நமது ஞானக் கண்களைத் திறக்கிறது. (பரி. லூக். 24-ம் அதி. 30-ம், 31-ம் வச.) "பின்னும் சம்பவித்ததேதெனில், அவர் அவர்களோடு பந்தியிலிருக்கையில், அவர் அப்பத்தைஎடுத்து ஆசீர்வதித்து, அதைப்பிட்டு அவர்களுக்குக் கொடுத்தார். உடனே அவர்களுடைய கண்கள் திறக்கப்பட அவர்கள் அவரை அறிந்துகொண்டார்கள்." நம் மீட்பரால் தயாரிக்கப்பட்ட அன்பின் ஆன்மஉணவான நற்கருணை நமது ஞானக்கண்களைத் திறந்து, தேவனையே காணச்செய்யும் என்பதை இவ்வசனங்கள்நமக்குவெகுவிளக்கமாக எடுத்துக் காட்டுகின்றன.

இவ்விரு மகத்தான உண்மைகளையே நம் தாய்த் திருச்சபையும் நமக்கு நாளாந்தம் திருவழிபாட்டின் மூலம் அறிய வைக்கிறது. வேதாகம வாசிப்பும், திருப்பலியும் பலிப்பொருளும் சேர்ந்ததே உண்மையான பலிபூரணமான வழிபா

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

✠

"எனக்கு அறிமுகமானவர்கள், என்னை அன்போடு நேசித்தவர்கள் அனைவரதும் செபங்கள் இத்தருணம் எனக்குத் தேவை"

— புனித எப்ரேம்

## நினைவு கூருவோம்

### W. சைமன் தமெல் அவர்கள் அமரத்துவமடைந்த முதலாம்வருட ஞாபகம்

பிறப்பு: 1893 இறப்பு: 21-4-68

இரக்கமுள்ள யேசுவே! மரித்த சைமன் தமெல் அவர்களின் ஆத்துமத்திற்கு நித்திய இளைப்பாற்றியைக் கொடுத்தருளும்.

மண்ணைவிட்டு மறைந்தாலும் என் மனக்கண்ணைவிட்டு என்றுமே அகலாத அருமை மாமனும், கருக்குப்பனை பாடசாலையில் முப்பது வருடமாகத் தலைமை ஆசிரியராகவிருந்து, எத்தனையோ ஆசிரியரை உதிக்கச் செய்தவருமான டபிள்யு. சைமன் தமெல் அவர்கள் இறைவனடிசேர்ந்த 1-ம் வருடம் இம்மாதம் 21-ந்தேதி பூர்த்தியாகிறது. எனவே இதனைக் கண்ணுறும் சகலரும் இவரின் ஆன்மசாந்திக்காக மன்றாடிக்கொள்ளுமாறு தயவுடன் கேட்கின்றேன்

மருமகள் : டபிள்யு. எம். பெர்னாண்டோ.

### முதல்வருட மரணஞாபகம்

தோற்றம்: 24-11-1918 திருமணம்: 11-2-1938
மறைவு: 22-4-1968

"என்னை அறிந்து நேசித்தவர்களே உங்கள் அனுதின செபத்தில் என்னை நினைத்தருளுங்கள்."

எங்கள் குடும்ப ஒளியாயிருந்த எமது நேசமனைவியும், அன்புத் தாயாரும், எமது சகோதரியுமான மரிய அம்புசம் இறைவன் திருவடிசேர்ந்த ஓராண்டு நிறைவுதினம் 22-4-69இல் பூர்த்தியாகின்றது. மறுநாள் 23-4-69 புதன்கிழமை காலை 7மணிக்கு சூராவத்தை புனித தெரேசா ஆலயத்தில் வண. ஏ. ஆர். பிறவுண் அடிகளால் அவவின் ஆன்ம இளைப்பாற்றிக்காகத் துயரப்பூசை ஒப்புக்கொடுக்கொடுக்கப்படும். இதைக் கண்ணுறும் அனைவரையும் அவவின் ஆன்மசாந்திக்காக மன்றாடுமாறு அன்புடன் பணிந்து கேட்டுக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

மனைவியை இழந்து துயருறும் கணவர் :
ஆசிரியமணி என். இராசேந்திரம்.

அன்புத் தாயைப்பிரிந்து பரதவிக்கும் ஏகபுத்திரி: லூர்து புஷ்பம்.

சகோதரியைப் பிரிந்து துயருறும் சகோதரர் : மேரிப்பிள்ளை, கிளாறம்மா, மாகிறேற், சாமிநாதர், தெரேசம்மா.

"லூட்ஸ் வில்லா"
சூராவத்தை, சுன்னாகம். 39-69

"பாவிகள் மீட்புக்காய் தேவபலியான செம்மறியே!
பாவி எம்மீது தயவாயிரும்."

### எ. அடைக்கலம் அவர்களின் 31-ம்நாள் மரணநினைவு

எங்களை விட்டுப்பிரிந்தாலும் எம் உள்ளங்களிலே அழியா ஆலயம் கொண்ட எம் அன்னை அடைக்கலம் அவர்கள் எம்மைப் பிரிந்த 31ஆம்நாள் 16-4-69இல் பூர்த்தியாகிறபடியால் அவவின் ஆன்ம இளைப்பாற்றிக்காக புங்குடுதீவு புனித சவேரியார் ஆலயத்தில் திவ்விய பலிபூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதைக் கண்ணுறும் அனைவரும் அவவின் ஆன்மஇளைப்பாற்றிக்காக வேண்டுமாறு பணிவாய்க் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கணவர் : பி. எலியாஸ்

தாயின் பிரிவால்வாடும் மக்கள் : திருமதி இ. மலர், திருமதி யே. யேசுமலர், செல்வி ஞானமலர், சூசைமலர், அந்தோனியம்மா.
மருமக்கள் : ம. இராயப்பு, ச. யேசுதாசன்.

40-69

### ஜெயநாதன் ஜேம்ஸ் அவர்களின் 15-வது வருட மரணஞாபகம்

பிறப்பு: 24-6-36 இறப்பு: 21-4-54

"ஆண்டவரே, இவருக்கு நித்திய இளைப்பாற்றியைத் தந்தருளும். நித்தியஒளி இவர்மீது பிரகாசிக்கக் கடவது."

இவருடைய ஆன்ம இளைப்பாற்றிக்காக ஒருதுக்கப் பாடற்பூசை 21-4-69இல் சில்லாலை கதிரைமாதா ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும். இதைக் கண்ணுறுவோர் இவருக்காக வேண்டிக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

சில்லாலை 41-69

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### சித்திரை — 1969

| | | | |
|---|---|---|---|
| 19 | சனி | பரி. மரியன்னையின் பூசை | [வெ] |
| 20 | ஞாயிறு | பாஸ்கா விழா. 2-ம் ஞாயிறு | [வெ] |
| 21 | திங்கள் | புனித அன்செல்ம் | [வெ] |
| 22 | செவ்வாய் | புனிதர்கள் சோத்தர், காயுஸ் | [சி] |
| 23 | புதன் | கிழமைப் பூசை | [வெ] |
| 24 | வியாழன் | புனித சிக்மரிங்கா பிதேலிஸ் | [சி] |
| 25 | வெள்ளி | புனித மாற்கு | [சி] |
| 26 | சனி | புனிதர்கள் கிளேத்துஸ், மார்செல்லினுஸ் | [சி] |

## காவலன் கருத்து

# தேவ அழைத்தல்

தேவனுடைய பணிக்குத் தம்மை அர்ப்பணிக்க விரும்பும் ஆண்களும், பெண்களும் சேர்ந்து தொண்டாற்றக்கூடிய எத்தனையோ சபைகள் திருச்சபையின் அமைப்பில் உள்ளன. இவை யாவும் திருச்சபையினுள் அடங்கியுள்ள பல்வேறு குடும்பங்கள் போன்று இயங்கி வருகின்றன. ஒவ்வொன்றும் தத்தமக்குரிய ஒழுங்குகளையும், சட்டதிட்டங்களையும், விசேஷ பணிகளையும் கொண்டதாக விளங்குகிறது. ஆனால், அவை அனைத்திற்கும் பொதுவாக விளங்கும் தன்மை என்னவென்றால் தேவ அழைத்தலாகும். இச்சபைகளின் அங்கத்தவர்கள் அனைவரும் அங்கிருப்பது தேவன் அவர்களைத் தெரிந்து கொண்டமையினாலேதான்.

இத்தேவ அழைத்தலை அவர்கள் பெற்றது எங்ஙனம்? தேவன் நேரே அவர்கள்முன் தோன்றி, "என் பின்னே வாருங்கள்" என்று கூறவில்லை. தமது தூதர் மூலம் அதை அறிவிக்கவும் இல்லை. துறவு வாழ்வை மேற்கொண்டவர் எவரையாவது இக் கேள்வியைக் கேட்டால் அவர்களில் பெரும்பாலோர் இதற்குச் சரியான ஒருவிடை அளிக்கமுடியாதவர்களாகவே யிருப்பார்கள். ஏனெனில், தேவன் தம்மை அழைத்தமையை ருசுப்பிக்கக்கூடிய சான்றுகளை அவர்கள் எடுத்துக் காட்டமுடியாது. தேவன் மற்றவர்களை விட்டுத் தம்மை அழைத்தது தம்மிடம் உள்ள விசேஷ தகுதியினால் என்றும் அவர்கள் கூறமுடியாது. இதற்கு மாறாக அவர்கள் ஞானஸ்நானத்தின் தண்ணீரைப் போன்றும், திருப்பலியின் அப்பத்தைப் போன்றும் சாதாரண இயற்கைப் படைப்புக்களாயிருந்தும் தேவனது சேவைக்கெனத் தெரிந்து கொள்ளப்பட்டவர் ஆவர்.

ஒவ்வொருவருடைய வாழ்விலும் திருப்பத்தை உண்டாக்கியது பல்வேறு விதமான நிகழ்ச்சிகளாயிருக்கலாம். ஒரு குருவானவரின் தொடர்போ, ஒரு ஞானஒடுக்கத்தின்போது கேட்ட சிலவார்த்தைகளோ, ஒரு கத்தோலிக்க சஞ்சிகையில் கண்ட கட்டுரையோ ஒருவர் மனதில் தேவஅழைத்தல் என்னும் வித்தை இட்டிருக்கலாம். ஆனால், இவ்வித்து முளைத்து, வளர்ந்து கனிகொடுக்கவேண்டும். முற்காலத்தைப் போலவே தேவன் இன்றும் பல அழைத்தல்களைக் கொடுத்த வண்ணமிருக்கிறார். தமது சேவைக்குத் தேவையான வேலையாட்களைத் தெரிந்த வண்ணமிருக்கிறார். ஆனால், அந்த அழைத்தலை உணர்ந்து ஏற்றுக்கொள்ள இக்காலச் சூழ்நிலை இடையூறாக இருக்கிறது.

ஆகவே, தேவ அழைத்தலுக்காக நாம் செபிப்பதென்றால், தேவனுடைய அழைத்தல் மக்களிடத்தில் பலனளிக்கவேண்டும் எனப் பிரார்த்திப்பதேயாகும். இளைஞர் உள்ளங்களில் விதைக்கப்பட்டு முளைத்து வரும் தேவ அழைத்தலென்னும் வித்து சூழ்நிலையின் வசத்தினால் அமுங்கி அழிந்துபோகாதபடிக்கு வேண்டிய திருவருளைக் கேட்பதோடு, சூழ்நிலையிலுள்ள இடையூறுகளை அகற்றுவதற்கும் எம்மாலானமட்டும் முயற்சி செய்யவேண்டும்.

> இறைவனிடமிருந்து பெற்ற நலன்களில் ஒரு பகுதியை அவருக்குத் திருப்பியளிப்பது கிறிஸ்துவர்களின் கடமையும், பெருமையுமாகும்.
>
> (வத். சங். ஏடு பொ. அப். 10.)

# ஆயரின் குரல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### தனிப்பெரும் கடன்கள்

கிறிஸ்தவர்கள் எல்லோர்மீதும் அழைத்தலுக்காகச் செபிக்க வேண்டுமென்று சார்ந்த பொதுக் கடமையுடன், எங்களுடைய அந்தஸ்து, சூழ்நிலை, பொறுப்பு இவைகளுக்கிணங்க, தனிப்பட்ட முறையிலும் பல கடமைகள் எம்மேல் திணிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை உங்கட்கு நினைவூட்டுகின்றோம்.

### இளைஞர்

சமுதாயத்தின் பெரும் செல்வங்களென்றும், நாளைய சமுதாயத்தை உருவாக்குபவர்களென்றும் அன்புடன் அழைக்கப்படும் இளைஞரே! உங்கள் மத்தியிலிருந்து தேவன் சிலரை விசேடபணிக்கு அழைக்கின்றார். அவரின் அழைப்பு அன்பின் அழைப்பு. அது அருளின் அழைப்பு. அதற்கு நீங்கள் தேவபயத்துடனும், பொறுப்புணர்ச்சியுடனும் பதில் கொடுக்க வேண்டும். இந்த அழைத்தல் உங்களுடைய "செவிகளில் வியத்தகு வழியில் ஒலிக்கும் ஒரு குரல்போல் வரும் என்று எதிர்பார்க்கக்கூடாது. மாறாக முன்மதியுள்ள கிறிஸ்தவர்களுக்குக் கடவுளின் உள்ளத்தை சாதாரணமாக வெளிப்படுத்தும் அடையாளங்களிலிருந்தே வெளிவருகின்றன." (சங். ஏடு. 559-ம் பக்.) ஆகையால் உங்கள் மத்தியில் தொண்டு செய்பவர்களின் வாயிலாக வரும் அழைத்தல் ஒலிகளை அதட்டாது அரவணையுங்கள்.

### பெற்றோர்


'இல்லத் திருச்சபை' என்று அழைக்கப்படக் கூடிய குடும்பத்தின் பெற்றோரே! "இறைவனிடமிருந்து பெற்ற நலன்களில் ஒருபகுதியை அவருக்குத் திருப்பியளிப்பது கிறிஸ்தவர்களின் கடமையும் பெருமையும்" என்கிறது வத்திக்கான் சங்கம். (சங். ஏடு. 525-ம் பக்.) உங்களுடைய குடும்பத்திலிருந்து ஒரு பிள்ளையையாவது தெய்வீக பணிக்கு அர்ப்பணிப்பது உங்கள் நோக்கமும் செபமுமாக இருக்கவேண்டும். "சொல்லாலும் முன்மாதிரியாலும் கிறிஸ்தவ அப்போஸ்தல வாழ்வில் பிள்ளைகட்கு பயிற்சி அளித்து, அவர்கள் தத்தம் அழைப்பைத் தேர்ந்தெடுக்க பெற்றோர் முன்மதியுடன் உதவவேண்டும். அவர்களில் எவருக்கேனும் தேவ அழைத்தல் இருப்பதாகக் கண்டால் அதை முழுக்கவனத்துடன் பேணிவளர்த்து ஆகியனசெய்ய முன்வரவேண்டும்.

### ஆசிரியர்

வருங்கால சமுதாயத்தை உருவாக்கும் இளைஞர் உங்கள் கையிலென்பதையும் நீங்கள்தான் அவர்களுக்கென்று கடவுளால் அனுப்பப்பட்ட அருளின் தூதுவர்கள் என்பதையும் மறவாதீர்கள். உங்களிடம் கடவுளால் கையளிக்கப்பட்டிருக்கும் இளைஞரை உங்கள் சொல்லாலும் முன்மாதிரியாலும், ஊக்குவித்தலாலும் இறையன்பில் வளர்ப்பீர்களாக. அவர்கள் மத்தியில் தேவஅழைத்தல் தோன்றுவதற்கு ஏதுவானவைகளைத் தயார் செய்யவும், அவ்வழைத்தல்கள் தோன்றுமிடத்து அவர்களை வழிநடத்தி உதவி செய்யவும் முன்வருவீர்களாக.

ஈற்றில் தேவ அழைத்தலைப் பொறுத்தமட்டில் நம்மெல்லோர்மீதும் சாரும் செப, தற்பரித்தியாக பணிக்கடன்களை நன்றாயுணர்ந்து செயல்புரிய எமது மேற்றிராசனத்திலே அழைத்தல்களின் அரசியாம் மருதமடு மாதாவைப் பிரார்த்தித்து உங்களை ஆசீர்வதிக்கும்,

ஆயர் இல்லம்
யாழ்ப்பாணம்;
17-4-1969




அன்பான பிதா,
+ ஜே. எமிலியானுஸ்பிள்ளை
யாழ் ஆயர்.

(இக்கடிதத்தை 20-4-1969, திவ்விய பூசைவேளையில் வாசித்து விளங்கப்படுத்துவது நலமாயிருக்கும்.)

## பரிசுத்த தந்தை சுவிற்செலாந்து செல்வார்

சகலதேச தொழிலாளர் மகாநாட்டில் கலந்து கொள்ளபரி. தந்தை6-வது சின்னப்பர் இந்த வருடம் ஆனிமாதத்தில் ஜெனிவா, சுவிற்செலாந்து செல்லவிருக்கின்றார்.

## கருதினல் கூறே ரோமாபுரி செல்கின்றார்

நமது கருதினல் கூறே அடிகளார், சென்றவாரம் ரோமாபுரிக்குப் பிரயாணமானார். திருச்சபையின் பிரமாணச் சட்டங்களை நிர்வகிக்கும் குழுவில் கூறே அடிகளார் ஓர் அங்கத்தவராவர். இக்குழு ஒருவருடத்தில் பலமுறை கூடுகின்றது.

## ஐசன்ஹோவர் மறைவுக்கு பரிசுத்த தந்தையின் துயரம்

முன்னாள் ஐக்கிய அமெரிக்கதேச ஜனாதிபதியாகவும், ஐக்கியதேசப் படைகளின் தலைவராகவும் கண்ணியமான தொண்டாற்றி அண்மையில் காலமான ஐசன்ஹோவர் அவர்களின் மறைவுபற்றித் தமது ஆழமான துயரைப் பரிசுத்த தந்தை 6-வது சின்னப்பர் திருமதி ஐசன்ஹோவர் அவர்களுக்கும், ஜனாதிபதி நிக்சன் அவர்களுக்கும் தெரிவித்திருக்கின்றார்.

## மண்டைதீவின் முதற்குரவர்

வண. பிதா, A. P. தேவசகாயம்

"சுமார் 300 வருடங்களாக மண்டைதீவு மக்கள் கத்தோலிக்க சமயத்தைத் தழுவி வாழ்ந்தபோதிலும் அவர்களில் ஒருவராவது இவ்வளவு காலத்திலும் ஒரு குரவராக அபிஷேகம் பண்ணப்படவில்லை. இக்குறை இப்போ தீர்க்கப்பட்டது" என்று ஒரு பேச்சாளர் 8-4-69இல் இக் குரவர் மண்டைதீவில நிறைவேற்றிய தமது முதற் பூசையின்பின் நடைபெற்ற வரவேற்புக் கொண்டாட்டத்தில் குறிப்பிட்டார்.

15-10-68இல் பூனாவில் ஒரு குரவராக அபிஷேகம் செய்யப்பட்ட தேவசகாயம் சுவாமியார் நிறைவேற்றிய பாடற்பூசைக்கு யாழ் மேற்றிராசனத்தின் பல பாகங்களிலுமிருந்து பல குருக்களும் கன்னியாஸ்திரிகளும் நூற்றுக்கணக்கான விசுவாசிகளும் சமுகமளித்துத் திருவிருந்தருந்திப் புதிய குரவரின் ஆசியையும் பெற்றனர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1969 ஆம் ஆ சித்திரை மீ 19 ஆம் உ சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300. தாபிதம்: 1876

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org